நல்ல நிலமாகு நண்பா

விதைகள்

VOL-1 ISSUE-11 MARCH 2021

இயேசுவின் பாடுகளும், சிலுவையில் மொழிந்த 7 வார்த்தைகளும்

அப்பக்கூடை

இதுவரை வெளிவந்த விதைகள் இதழ்களின் முக்கிய பக்கங்கள்

வெளி வந்து விட்டது...

இப்போது விற்பனையில்...

Rs. 150



விலை **150** ரூபாய் மட்டுமே
(அனுப்புவதற்கான கட்டணம் உள்பட)
(வெளிநாடுகளுக்கு அஞ்சல் கட்டணம் உண்டு)

- 100 பக்கங்கள்
- 26 கட்டுரைகள்
- பல்வேறு எழுத்தாளர்கள்
- முழுவதும் வண்ண மயம் (colour print)
- ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வழிகாட்டி

தேவைப்படுவோர் APPAKKOODAI என type செய்து **+91 86680 47378** என்ற எண்ணுக்கு SMS அனுப்பினால் போதும்

குறிப்பு:
இதில் கிடைக்கும் நன்கொடைகள் தொடர்ந்து புத்தகம் வெளியிடுவதற்க்கு மட்டுமே பயன்படுத்தப்படும்

விதைகள்

Vol: 1 ● Issue: 11 ● மார்ச் 2021 ● Pages: 53

தேவனுக்கே மகிமை உண்டாவதாக! ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மறுபடியும் விதைகள் பத்திரிகையின் வழியாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கர்த்தர் நம் அனைவரையும் அவருடைய செட்டையின் நிழலில் தொடர்ந்து பாதுகாத்து வருகிறார் என்பதால் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

விதைகள் பத்திரிகைக் குறித்த பலருடைய நிறைகுறை கருத்துக்களுக்கும், பொருளாதார உதவியினால் தாங்குபவர்களுக்கும், நாங்கள் சோர்வுறாதபடிக்கு உற்சாகப்படுத்துபவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தவக்காலம், ஆசீர்வாதமாய் கடந்து கொண்டிருக்கிறது, நம் வாழ்வை மறுபரிசீலனை செய்வதற்கும், ஆண்டவருக்குள் இன்னும் அதிகமாக நெருங்குவதற்கும், வேத வாசிப்பிலும், ஜெபத்திலும், தியானத்திலும் அமர்வதற்கும், தேவன் நம்மை வழிநடத்தி வருகிறார். தவக்காலம் முடிந்தாலும் நம் இறைபக்தி வாழ்க்கை தொடர்ந்தால் மாத்திரமே, தவக்கால கடைபிடிப்புகள் அர்த்தமுள்ளதாக மாறும், இல்லையேல் இது வெறும் நாட்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்தது போல் மாறிவிடும். இம்மாத பத்திரிகையில் இயேசுவின் பாடுகளும், சிலுவையில் மொழிந்த 7 வார்த்தைகளும் இடம்பெற்றுள்ளது, இதை எழுதிய ஒவ்வொருவருக்கும் நன்றியை கூறிக்கொள்ளுகிறேன். இதை நீங்கள் படிக்கும் போது, இயேசு நமக்காக பட்ட பாடுகளை நினைவு கூர்ந்து அவர் விரும்பும் பரிசுத்த வாழ்வை வாழ நம்மை அர்ப்பணிப்போமாக. ஆமேன்.

இவண்,
Bro. S. மெர்லின்
ஆசிரியர்

NALLA NILAMAKU NANBA

16/76 Vettukattuvilai,
Kannanoor -629158,
Kanyakumari District, Tamilnadu, India
Phone +91 94869 54577

+91 86680 47378
/நல்ல-நிலமாகு-நண்பா-101820927950003

மலர்க்குழு உறுப்பினர்கள்

S. மெர்லின் (ஆசிரியர்)
K. S. பிரசன்னா மெர்லின் (மேலாண்மை)
J. ஜாண் டேனியேல்
S. ஜாக்குலின் ஷைன்
Dr. அரவிந்த் ஜெயக்குமார் ம.
R. ஹெலன் ஜெனிபா
J. ஜவஹர்

Design by : **DANNIES** DESIGNS

கெத்செமனே அழுகுரல்...

K. ஜஸ்டஸ்
சென்னை

இயேசு, தமது சீஷர்களோடு கடைசி இராப்போஜன பந்தியை முடித்து ஸ்தோத்திரப் பாட்டை பாடின பின்பு, அவரும் அவரது பதினொரு சீஷர்களும் ஒலிவ மலைக்குப் புறப்பட்டுச் சென்றார்கள் (மத்தேயு 26.30, மாற்கு 14.26). கெத்செமனே (Gethsemane) என்னும் தோட்டம் இந்த ஒலிவ மலையின் சரிவில் அமைந்துள்ளது. இது, கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறத்தில் அமைந்துள்ளது (யோவான் 18.1). இந்த கெதரோன் ஆறு, ஆங்கில வேதாகமங்களில், “சிற்றாறு” (brook / KJV) எனவும், “பள்ளத்தாக்கு” (valley – NIV, RSV) எனவும், மலையிடுக்கிலுள்ள ஆழமான ஓடை (raving - Living Bible) எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இயேசு, கெத்சமனே (Gethsemane) தோட்டத்திற்கு செல்லும் வழியில், இந்த கெதரோன் ஆற்றைக் கடந்து சென்றார் என அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார் (யோவான் 18:1). இதற்கு காரணம் இல்லாமல் இல்லை. ஒவ்வொரு பஸ்கா பண்டிகையின் காலங்களிலும் எருசலேம் தேவாலயத்தில் மிக அதிக அளவில் ஆடுகள் கொல்லப்படுவது வழக்கம். இயேசு கிறிஸ்துவின் நாட்களில் பஸ்கா பண்டிகையின்போது ஒவ்வொரு முறையும் ஏறக்குறைய 2,56,000 ஆடுகள் பலியிடப்பட்டதாக ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. தேவாலயத்தில் கொல்லப்பபடும் ஆடுகளின் இரத்தம் பலிபீடத்தின் மேல் ஊற்றப்படும்போது, அது அங்கிருந்து புறப்படும் வாய்க்கால் (channel) வழியாக சென்று கெதரோன் ஆற்றை அடையும் நிலையில் உறைந்து விடும். எனவே வாய்க்கால் முழுவதும் சிகப்பு இரத்த நிறத்தில் தோற்றமளிக்கும். இயேசு, கெதரோன் ஆற்றைக் கடந்து செல்லும் போது, நிலா வெளிச்சத்தில் அந்த காட்சியை கண்டவாறு சென்றிருக்க வேண்டும். அப்போது அந்த காட்சி நிச்சயமாக அவர் மனதில், தாம் மனுக்குலத்தின் பாவத்திற்காக பலியாகப்போகிறோம் என்ற சிந்தனை எழும்பியிருக்கும்.

கெத்சமனேயில் இயேசு இரத்த வேர்வை சிந்தினார்

கெத்சமனே (Gethsemane) என்ற பெயருக்கு “எண்ணைச் செக்கு” (oil press) என்பது பொருள். அந்த இடத்தின் பெயருக்கு ஏற்ப இயேசு அங்கே ஆத்துமாவில் பிழியப்பட்டார். அங்கே அவர் முகங்குப்புற விழுந்து, அதிக ஊக்கமாய் ஜெபித்தார். அவர் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார் (எபிரேயர் 5:7).

இயேசு ஜெபத்தில், என் பிதாவே, இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று மூன்றுமுறை ஜெபம் பண்ணினார் (மத்தேயு 26:39,42,44; மாற்கு 14:36,39, லூக்கா 22:42). “அப்பா” (Abba) என்ற பதம் அரமேயு (Aramaic) மொழியில், “என் பிதாவே” (my father) என பொருள்படும். ஒரு குழந்தை, தன் தகப்பனை “அப்பா” என அன்பாக அழைப்பதுபோல, இயேசு, தேவனை நோக்கி, “என் பிதாவே” (my father) என அழைத்து, தேவனது சித்தத்துக்கு தம்மை முழுமையாக அர்பணித்தார்.

இயேசு, சிலுவை மரணத்தைக் கண்டு அஞ்சி அதிலிருந்து விடுதலை பெற பிதாவை நோக்கி, இப்படிப்பட்ட ஜெபத்தை ஏறெடுத்தார் என நாம் ஒருபோதும் எண்ணிவிடக் கூடாது. இயேசு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தார் (எபிரேயர் 10:7). அவர் தம்முடைய தெய்வீகத்தை துறந்து, முழு மனிதனாகவே இந்த உலகத்தில் வந்தார் (பிலிப்பியர் 2:5-8). மட்டுமல்ல, முழு மனிதனாகவே, தம்மை பாடுகளுக்கும்,

அவமானத்துக்கும், நிந்தனைக்கும், சிலுவை மரணத்துக்கும் ஒப்புக் கொடுத்தார். தமக்காக மாம்சீக வைராக்கியம் காண்பித்த பேதுருவை, கடிந்து கொண்ட இயேசு, அவனைப் பார்த்து, பிதா எனக்குக் கொடுத்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ? என்றார் (யோவான் 18:11). மேலும், இயேசு, பிதாவை நோக்கி ஏறெடுத்த ஜெபத்தில், 'இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது. நான் என்ன சொல்லுவேன், பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ, ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார்...' (யோவான் 12:27,28). இயேசு தமது சிலுவை மரணத்தில் தெளிவாகவும், உறுதியாகவும் இருந்தார்.

இயேசு பிதாவை நோக்கி ஏறெடுத்த விண்ணப்பத்தில், "பாத்திரம்" (cup) என குறிப்பிடுவது, "பிதாவை விட்டு பிரியும் அகோர நிலையை" குறிப்பதாய் உள்ளது. பிதா, ஒருபோதும் தன் குமாரனை தனியே இருக்க விடுவதில்லை (யோவான் 8:29). ஆனால் இப்போது, பாவமற்ற பரிசுத்தராகிய இயேசுவின் மீது, மனுக்குலத்தின் பாவங்கள் அத்தனையும் சுமத்தப்படும் போது அவர் பாவமாக்கப்படப்போகிறார் (2 கொரிந்தியர் 5:21). அந்த நேரத்தில் பிதாவின் முகம் இயேசுவுக்கு மறைக்கப்படபோகிறது. பாவ இருள் இரட்சகரின் ஆத்துமாவை சூழ்ந்து கொள்ளும்போது, அவரால் பிதாவை காண முடியாது. அந்த நிலை, நினைத்துப் பார்க்க முடியாத அகோர வேதனையை தரக்கூடியதாகும். இயேசு, பிதாவை விட்டுப் பிரிந்து அகோரமான அந்தகார வேளைக்குள் பிரவேசிக்கும் நிலைதான் "பாத்திரம்" (cup) என கருதப்படுகிறது. எனவேதான் இயேசு, என் பிதாவே, இந்த பாத்திரம் (cup) என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார் (மத்தேயு 26:39, மாற்கு 14:36, லூக்கா 22:42). இயேசு, சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் வேளையில் பிதாவை விட்டு பிரிந்த, அந்த மூன்று மணி நேர அகோர வேதனைக்குப் பின்னர், பிதாவை நோக்கி, என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர் (மத்தேயு 27:46, லூக்கா 15:34) என கூறிய வார்த்தைகள் இதனை உறுதிப் படுத்துவதாக உள்ளது.

ஜெபவேளையில் அவருடைய வேர்வை, இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழுந்தது (லூக்கா 22:44). இந்த உண்மையை மருத்துவராகிய லூக்கா பதிவு செய்துள்ளதால் இதில் ஆழமான மருத்துவ உண்மை அடங்கியிருக்கிறது. ஒருவர் தாங்க முடியாத மன அழுத்தத்துக்குள் (under extreme mental pressure) கடந்து செல்லும்போது சிலவேளைகளில் அவரது இரத்த நாளங்கள் வெடித்து இரத்தமானது வேர்வைத் துவாரங்களின் வழியாக வேர்வையோடு கலந்து வெளியேறும். இயேசுவுக்கு இது நேரிட்டது. அவர் தாங்கமுடியாத மனவேதனைக்குள் கடந்து சென்றார் என்பது உண்மை.

கெத்செமனே முதல் சிலுவை மரணம் வரை

ஓர் விரிவான அலசல்

K. ஜஸ்டஸ்
சென்னை

இயேசுவின் உபதேசங்களைக் கேட்டு அவரோடு மூன்றரை ஆண்டுகள் ஊழியம் செய்த அவருடைய பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத் பணத்தின் மீது ஆசை கொண்டு தன்னுடைய ஆசானையே, அவரை விரோதித்தவர்களுக்கு 30 வெள்ளிக்காசுக்கு காட்டிக் கொடுக்க உடன்பட்டு கெத்செமனே தோட்டத்தில் அவரை முத்தமிட்டு காட்டிக் கொடுத்த துரோகச் செயலை செய்தான்.

இயேசு அற்புதங்களைச் செய்கிறவரும், வல்லமை படைத்தவருமாய் இருந்தபடியால், அவர் தப்பிச் செல்லக் கூடும் என எண்ணி அதிக அளவில் ரோமப் போர்ச்சேவகர்களை, யூதமதத் தலைவர்கள் அழைத்து வந்திருந்தனர். மேலும், அவரை கெத்சமெனே தோட்டத்திலுள்ள மரங்களுக்கு இடையிலோ, மலைப்பகுதியிலுள்ள மறைவிடங்களிலோ தேடவேண்டிய நிலை ஏற்படும் என நினைத்து தங்கள் கைகளில் பந்தங்களையும், தீவட்டிகளையும், ஆயுதங்களையும், பட்டயங்களையும், தடிகளையும் பிடித்துக் கொண்டு வந்தார்கள்.

இயேசு எதிரிகளால் கைது செய்யப்பட்டபோது சீஷர்கள் அத்தனை பேரும் இயேசுவை விட்டு ஓடிப்போய் விட்டார்கள். ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகள் ஆண்டவரோடு ஐக்கியமாய் இருந்தவர்கள். இப்போது ஆபத்து வருவதை கண்டு உயிருக்குப் பயந்து ஓடி ஒளிந்து கொண்டனர்.

தற்காலத்தில் கொடுங்குற்றவாளிக்கு கைவிலங்கு மாட்டுவது போல, அந்த நாட்களிலுள்ள ரோமருடைய

வழக்கத்தின்படி, ஒரு பயங்கரவாதியைப் போல இயேசுவைப் பிடித்துக் கட்டிக் கொண்டு போனார்கள்.

இயேசுவைப் பிடித்துக் கட்டி கொண்டு போனவர்கள், அவரை முதலாவது பிரதான ஆசாரியனாகிய அன்னாவின் முன்பு நிறுத்தினார்கள். அவன் அந்த வருஷத்து பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான். அன்னா, இயேசுவிடம் அவருடைய சஷரைக் குறித்தும் போதகத்தைக் குறித்தும் அவரிடமே விசாரித்தான். உண்மையில் இந்த அன்னா, இயேசுவை விசாரணை செய்வதற்கு சட்டப்படி எந்த தகுதியும் உடையவனல்ல. அவனது இச்செயல் யூதருடைய முறைமைகளுக்கு புறம்பானதாகும். மேலும் இந்த அன்னா, இயேசுவை முறைப்படி விசாரிக்க வில்லை. எந்த சாட்சியையும் அவன் அழைத்து விசாரிக்கவில்லை. எனவேதான் இயேசு, அன்னாவிடம், நீர் என்னை விசாரிக்க வேண்டியதென்ன ? நான் வெளியரங்கமாய் போதித்தேன். அந்தரங்கமாய் நான் ஒன்றும் பேசவில்லை. நான் சொன்னவைகளை கேட்டவர்களிடத்தில் விசாரியும் என்றார். நான் பேசியிருக்கிறவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்றார் (யோவான் 18:20,21). இயேசு இவ்வாறு சொன்னபோது கேட்டுக் கொண்டிருந்த சேவகனொருவன், பிரதான ஆசாரியனுக்கு இப்படியா பதில் சொல்வது என அவனது கன்னத்தில் ஒரு அறை அறைந்தான். இயேசு அந்த சேவகனை பார்த்து, நான் தவறாக பேசினால், அது என்ன என்று சொல்? அதை விட்டுவிட்டு என்னை ஏன் அடிக்கிறாய்? என்றார் (யோவான் 18:22,23). அப்போது, அன்னா அந்த சேவகனை தடுக்கவோ, கடிந்து கொள்ளவோ செய்யவில்லை. அன்னாவின் விசாரணை முறையற்றதொரு விசாரணையாகும்.

இயேசுவிடம் எந்த குற்றத்தையும் அன்னாவால் கண்டுபிடிக்க இயலாமல், அவரை கட்டுண்டவராகவே அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனும், தன் மருமகனுமான காய்பாவினிடத்தில் அனுப்பினான். (யோவான் 18:24).

பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் தலைமையில் நடைபெற்ற விசாரணை அவன் வீட்டில் நடைபெற்றது. அங்கே ஆலோசனை சங்கத்தார் (Sanhedrin) அனைவரும் கலந்து கொண்டனர். யூதர்களின் ஆலோசனை சங்கமானது, தேவாலய வளாகத்திலுள்ள கல் மண்டப அரங்கத்தில் (Hall of Hewn Stone) மட்டுமே கூட்டப்பட வேண்டும். பிரதான ஆசாரியனாகிய அன்னாவின் வீட்டில் கூடியது விதிமீறலாகும். உண்மையில் அந்தக் கூடுகை, இயேசுவை கொலை செய்வதற்கு ஏதுவாக பொய் சாட்சிகளை உருவாக்குவதற்காக கூடிய கூட்டமாகும். பிரதான ஆசாரியனுடைய கேள்விகளுக்கும் எந்தவித பதிலையும் அளிக்காமல் இயேசு மௌனமாக இருந்ததால், பிரதான ஆசாரியன் அவரிடமிருந்து பதிலை வரவழைக்க விரும்பினான். எனவே அவன், அவரை நோக்கி, நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி

ஜீவனுள்ள தேவனுடைய தேவன்பேரில் ஆணையிட்டு கேட்கிறேன் என ஆணைக்கு உட்படுத்தினான்.

மோசேயின் நியாயப்பிரமாணப்படி ஒருவன் தேவன் பேரில் ஆணையிட்டுக் கேட்டால் (லேவியராகமம் 5:1) கண்டிப்பாக பதிலளிக்க வேண்டும். எனவே இயேசு, தாம் தேவனுடைய குமாரன் என்பதை உறுதியாக கூறியது மட்டுமல்ல தாம் சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் (சங்கீதம் 110:1) வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் (தானியேல் 7:13) இதுமுதல் காண்பீர்களென்றும் சொன்னார். இயேசு தமது பதிலை, பிரதான ஆசாரியனுக்கு மட்டுமல்லாது அங்கு கூடியிருந்த ஆலோசனை சங்கத்தார் அனைவருக்கும் சேர்த்தே சொன்னார். இந்த வார்த்தைகளைக் கேட்ட பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, இவன் தேவதூஷணம் சொன்னான் என்றான். பிரதான ஆசாரியன் தன் ஆசாரியப் பட்டத்திற்குரிய வஸ்திரத்தைக் கிழித்தது, அவனுடைய மதவெறிபிடித்த உணர்ச்சியின் உச்சகட்ட வெளிப்பாடு மட்டுமல்ல இயேசுவுக்கு மரணத்தண்டனை அளிக்க வேண்டும் என்பதை செய்கையால் உணர்த்தும் காரியமாகவும் காணப்பட்டது எனலாம். இனி சாட்சிகள் நமக்கு தேவையில்லை. காரணம் அவரே தம்மைத் தாமே குற்றவாளியாக்கி கொண்டார், அவர் மரணத்தண்டனைக்குரியவர் என்ற தோரணையில், உங்களுக்கு என்ன தோற்றுகிறது என சுற்றியிருந்தவர்களைப் பார்த்துக் அவன் கேட்டான். சுற்றியிருந்த யூதமதவெறியர்கள் மரணத்துக்கு பாத்திரவானாயிருக்கிறான் என்றனர் (மத்தேயு 26:66). உண்மையில், பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் வீட்டில் கூடிய ஆலோசனை சங்க கூட்டத்தில் இயேசுவை, கொலை செய்ய முடிவு செய்தார்கள்.

பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் விசாரணையைத் தொடர்ந்து, இயேசுவை பத்திரமாக பாதுகாக்கும் பொருட்டு தேவாலயக் காவலர் வசம் ஒப்படைக்கப்பட்டார். ஆனால் அவர்களோ வேலைக்காரருடன் சேர்ந்து, சிலர் அவருடைய முகத்தில் துப்பவும், சிலர் அவருடைய முகத்தை மூடி தலையில் குட்டவும், அவருடைய கன்னத்தில் அறைந்தும் சித்திரவதை செய்தார்கள். மேலும் கிறிஸ்துவே உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் சொல்லும் என அவரை கேலி செய்தார்கள். தொடர்ந்து அநேக தூஷண வார்த்தைகளை அவருக்கு விரோதமாக கூறினார்கள்.

வெள்ளிக்கிழமை விடியற்காலையில் அவசரமாக கூடிய, யூதர்களின் ஆலோசனை சங்கத்தின் முன் இயேசு நிறுத்தப்பட்டார். இயேசு கிறிஸ்துவின் நாட்களில், யூதர்களின் ஆலோசனை சங்கம் என்றழைக்கப்படும் 'சன்கெட்ரின்' (sanhedrin), யூதர்களின் உச்சநீதி மன்றமாக (highest tribunal of the jews) திகழ்ந்தது. ஆலோசனைச் சங்கத்தார் இயேசுவிடம் நீ கிறிஸ்துவா? என்றார்கள். இயேசு அவர்களிடம், நான் சொன்னாலும் நம்பமாட்டீர்கள், நான் கேட்டாலும்

எனக்கு பதில் சொல்ல மாட்டீர்கள், என்னை விடுதலை பண்ணவும் மாட்டீர்கள் என்றார். இயேசுவின் இந்த பதில் அவர்கள் இயேசுவை கொலை செய்ய முடிவெடுத்து விட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தும் விதமாக உள்ளது. அவர்கள் மீண்டும் இயேசுவை நோக்கி, அப்படியானால், நீ தேவனுடைய குமாரனா என்று கேட்டார்கள். அதற்கு இயேசு, நீங்கள் சொல்லுகிறபடி நான் அவர்தான் என்றார். உடனே, ஆலோசனை சங்கத்தார், நாமே இவனுடைய வாயினாலே கேட்டோமே, இனி வேறு சாட்சி வேண்டியதில்லை என்றார்கள்.

இயேசுவை விசாரித்ததில், அன்னாவின் விசாரணை, காய்பாவின் விசாரணை, ஆலோசனை சங்கத்தின் விசாரணை என யூதர்களின் அனைத்து விசாரணகளும் யூதர்கள் வகுத்திருந்த அடிப்படை விதிகளுக்கு முரணாகவே நடைபெற்றது. அனைத்து கிரிமினல் குற்றங்களும் பகல் நேரத்தில் மட்டுமே விசாரிக்கப்பட வேண்டும். மேலும், பஸ்கா பண்டிகை நேரத்தில் கிரிமினல் குற்றங்கள் ஒருபோதும் விசாரிக்கப்படக்கூடாது. குற்றங்கள் அனைத்தும் இரண்டு சாட்சிகளால் நிரூபிக்கப்பட வேண்டும். சாட்சிகள் தனித்தனியாக விசாரிக்கப்படுவர். குற்றவாளிக்கு மரணத் தண்டனை வழங்கினாலும், அத்தண்டனையை அதேநாளில் நிறைவேற்றக்கூடாது. ஒரு இரவு கடந்த பின்னரே நிறைவேற்ற வேண்டும். ஆனால், இயேசுவை விசாரித்ததில் யூதமதத் தலைவர்கள் எந்த அடிப்படை விதியையும் பின்பற்றவில்லை. மாறாக இயேசுவை கொலை செய்ய வேண்டும் என்பதே அவர்களின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

மத சம்பந்தமாக குற்றங்களுக்கு தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை யூதர்களின் ஆலோசனை சங்கம் பெற்றிருந்தாலும், மரண தண்டனை வழங்க வேண்டுமானால், ரோம அரசாங்கத்தின் சம்மதம் பெற வேண்டும் என்ற நிலை இருந்தது. அந்நாட்களில் மரணத்தண்டனையை நிறைவேற்றும் அதிகாரம் யூதர்களின் ஆலோசனை சங்கத்திற்கு இல்லை. எனவே, இயேசுவை ரோம ஆளுநனான பிலாத்துவின் முன் நிறுத்துவது என யூதர்களின் ஆலோசனை சங்கம் முடிவு செய்து, முறைப்படி ஒருநாள் காத்திராமல் அன்றே மரணத்தண்டனையை நிறைவேற்றும் பொருட்டு, இயேசுவை கட்டி அவசர அவசரமாக யூதேயாவின் ஆளுநனாயிருந்த பிலாத்துவினிடத்தில் கொண்டுபோனார்கள். இயேசு, பிலாத்துவின் முன் விசாரணைக்காக நிறுத்தப்பட்ட அந்நேரம் வெள்ளிக்கிழமை விடியற்காலமாயிருந்தது (யோவான் 18:28).

அந்த நாட்களில், ரோம அதிகாரிகள் தங்கள் அரசாங்க பணிகளை விடியற்காலத்திலேயே துவங்கி விடுவர். பிலாத்துவின் முதற்கட்ட விசாரணையை நான்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிடுகிறார்கள் (மத்தேயு 27:11-14; மாற்கு 15:1-5; லூக்கா 23:1-5; யோவான் 18:28-38). பிரதான

ஆசாரியன் தலைமையில் வந்த ஆலோசனை சங்கத்தார் இயேசுவை, பிலாத்து விசாரணை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அவனிடம் கொண்டு செல்லவில்லை. மாறாக தாங்கள் ஏற்கனவே இயேசுவுக்கு மரணத் தண்டனை வழங்க வேண்டும் என தீர்மானித்ததை பிலாத்தின் மூலம் நிறைவேற்ற வந்திருந்தனர்.

இயேசுவை தனிப்பட்ட விதத்தில் விசாரணை செய்த பிலாத்து, அவரிடத்தில் எந்த குற்றத்தையும் காணவில்லை (லூக்கா 23:4). இந்நிலையில், இயேசு கலிலேயாவைக் சேர்ந்தவர் (லூக்கா 23:5) என்பதை பிலாத்து கேட்டவுடன், அதை ஆதாரமாகக் கொண்டு தான் இந்த வழக்கை விசாரிப்பதிலிருந்து நழுவி விடலாம் என எண்ணி, இயேசுவை நியாயம் விசாரிக்க ஏரோதுவிடம் அனுப்பினான்.

அந்த நாட்களில் கலிலேயா பகுதி, ஏரோது அந்திப்பாவின் (Herod Antipas) கட்டுப்பாட்டில் இருந்தது. பஸ்கா பண்டிகையை முன்னிட்டு அவனும் எருசலேமில் முகாமிட்டிருந்தான். ஏரோதின் விசாரணையின்போது, அவனது கேள்விகளுக்கு இயேசு எந்தவித மறுமொழியும் அளிக்காமல் மௌனமாயிருந்தார்.

இந்நிலையில், பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் அபாண்டமான குற்றச்சாட்டுகளை, அவர் மேல் பிடிவாதமாய் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். அவர்களது நோக்கம் இயேசுவுக்கு எப்படியாவது மரணத்தண்டனை வழங்கிவிட வேண்டும் என்பதாகும். அப்பொழுது ஏரோது, தன்னுடைய நிலையை (தான் ஒரு நியாதிபதி என்பதை) உணராமல், தனது போர்ச்சேவகரோடு சேர்ந்து இயேசுவை இகழ்ந்து, பரியாசம் பண்ணி, பளபளக்கும் வண்ணத்திலான ஆடையை அவருக்கு உடுத்தி அவரை பிலாத்துவினிடத்தில் திருப்பியனுப்பினான்.

பிலாத்து, இயேசுவை மீண்டும் விசாரித்தான். அவன், பிரதான ஆசாரியர்களையும், அதிகாரிகளையும் ஜனங்களையும் நோக்கி, நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. மரணத்திற்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே. ஆகையால் இவனை தண்டித்து விடுதலை பண்ணுவேன் என்றான் (லூக்கா 23:13-16). இயேசுவை விடுதலைப்பண்ண மனதாய் மறுபடியும் அவர்களிடத்தில் பேசினான் (லூக்கா 23:20). மூன்றாம் முறையும் அவர்களிடம், மரணத்துக்கு ஏதுவான எந்த குற்றத்தையும் நான் இயேசுவிடம் காணவில்லை. எனவே நான் இவனை தண்டித்து விடுதலையாக்குவேன் என்றான் (லூக்கா 23:22).

அதேவேளையில் இவனை சிலுவையில் அறையும், அறையும் என ஜனக்கூட்டம் எழுப்பிய சத்தம் அதிகமாயிருந்தது (லூக்கா 23:23). மேலும் பிரதான ஆசாரியர், மூப்பர் தூண்டுதலின் பேரில் ஜனங்கள் பரபாஸை தங்களுக்கு விடுதலை செய்யவும், இயேசுவை கொலை செய்யவும் வேண்டுமென சத்தமிட்டார்கள்.

பரபாஸ் என்பவன் ஒரு கள்ளன் (யோவான் 18:40). அவன் நகரத்தில் கலகம் பண்ணி, அந்த கலகத்தில் கொலை செய்து அதனிமித்தம் காவலில்

இருந்தவன். இந்நிலையில், இயேசுவை வாரினால் அடித்தால், யூதர்கள் ஒருவேளை திருப்தியடைவார்கள் அவர்கள் மனம் மாறும், அப்போது இயேசுவை விடுதலை பண்ணலாம் என பிலாத்து நினைத்து, இயேசுவை வாரினால் அடிக்கக் கட்டளையிட்டான் (யோவான் 19:1).

ரோமர்களின் சாட்டையடி மிகவும் கொடூரமானதாகும். ரோமர்கள் பயன்படுத்திய சாட்டையானது, துண்டு மரத்தினால் ஆன கைப்பிடியைக் கொண்டது. அந்தக் கைப்பிடிக்குள் தோலினால் ஆன நீளமான பல வார்களின் ஒருமுனை அழுத்தி இணைக்கப்பட்டிருக்கும். வார்களின் மறுமுனையில் ஈயம் அல்லது பித்தளையிலான உலோகத் துண்டுகள், கூர்மையான எலும்புத் துண்டுகள் போன்றவை பதிக்கப்பட்டிருக்கும். ரோமர்கள் குற்றவாளிக்கு தண்டனை வழங்கும்போது குற்றவாளியின் ஆடைகளை கழற்றி விட்டு, ஒரு கம்பத்தின் மேல் குனிந்து நிற்கும் விதத்தில் கைகளை கட்டுவார்கள். பின்பு குனிந்து நிற்கும் குற்றவாளியின் வலது புறத்தில் ஒருவனும், இடது புறத்தில் ஒருவனுமாக இரண்டு போர்சேவகர் நின்று கொண்டு மாறி மாறி சாட்டையால் அடிப்பார்கள். அப்படி அடிக்கும் போது குற்றவாளியின் முதுகு, உலோகத் துண்டுகளாலும், எலும்புத்துண்டுகளாலும் ஆழமாக கிழிக்கப்படும். சதை பிய்த்துக் கொண்டு வரும். இரத்தம் சிதறித் தெறிக்கும். சிலவேளைகளில் உள்ளுறுப்புகளும் வெளியே தெரியும். இதனால் சிலவேளைகளில் அடிபடும் நபர் மரணமடையவும் நேரிடும்.

யூதர்களின் முறைமையின்படி குற்றவாளியை கீழே படுக்கவைத்து அதிகப்படியாக நாற்பது அடிகள் முறை சாட்டையால் அடிக்கலாம் (உபாகமம் 25:2,3) ஆனால் ரோமர்களின் சாட்டையடிக்கு வரம்பு இல்லை. இயேசுவை வாரினால் அடிக்க ஏதுவாக போர்சேவகர் அவரது வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தினார்கள் (மத்தேயு 27:28, மாற்கு 15:17). பின்பு போர்ச்சேவகர், இயேசுவை மாறிமாறி சாட்டையால் அடித்தார்கள். சாட்டையடிகள் மிகக் கடுமையாக இருப்பதால், சதை பிய்த்துக் கொண்டு வெளியே வரும். அப்போது விலா எலும்புகள் வெளியே தெரியும். இயேசுவுக்கு இது நேரிட்டது (சங்கீதம் 22:17).

இயேசு எத்தனை முறை சாட்டையால் அடிக்கப்பட்டார் என்று வேதத்தில் குறிப்பு இல்லையென்றாலும், கடைசி சாட்டையடியை பெறுவதற்கு அவருடைய சரீரத்தில் பெலன் இருக்கும்வரை அடிக்கப்பட்டார் என்பதே உண்மை.

இயேசு வாரினால் அடிக்கப் பட்டதைத் தொடர்ந்து ரோமப் போர்ச்சேவகர்கள், அவரை பிலாத்துவின் அரண்மனைக்கு கொண்டு சென்று அவரை அவமானப்படுத்தி, துன்புறுத்தினார்கள், அங்கே அவர்கள் போர்சேவகர் கூட்டம் முழுவதையும் கூடிவரச் செய்தார்கள். போர்ச்சேவகரின் முழு கூட்டம் என்பது 600 போர்ச்சேவகர் அடங்கிய படைப்

பிரிவாகும்.
போர்சேவகர்கள், இயேசுவை அவமானப்படுத்தும் விதத்தில் காட்டுமிராண்டித்தனமாக அவரிடம் நடந்து கொண்டார்கள். அவருடைய வஸ்திரங்களை கழற்றி, சிவப்பான மேலங்கியை (scarlet robe) அவருக்கு உடுத்தினார்கள். இது இராஜா அணியும் தளர்ந்த மேலாடையை, போலியாக பிரதிபலிப்பதாய் இருக்கிறது.

இராஜாவின் மகிமையை வெளிப்படுத்தும் விதத்தில் கிரீடம் அமைவதுபோல இயேசுவை கேலி செய்யும் விதத்தில், முள்ளுகளினால் முடியைப் பின்னி, அவருடைய சிரசின்மேல் வைத்தார்கள்.
இந்த முள்ளுகள் அநேகமாக பாலஸ்தீனத்திலும், எருசலேமை சுற்றியுள்ள வெதுவெதுப்பான பகுதிகளிலும் காணப்படும் ஒருவித மரத்திலுள்ள கிளைகளாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. அந்த கிளைகள் அதிக அளவில் கூர்மையான முட்களை கொண்டதும், வளையக்கூடியதாயும், எளிதில் ஒடிக்க முடியாதவாறு உறுதியாகவும், மாலைகள் (garland) செய்ய பொருத்தமானதாகவும் காணப்படுகிறது. இயேசுவின் தலையில் இவ்விதமான கிரீடம் வைத்தபோது, அவருடைய தலையிலும், தலையைச் சுற்றியுள்ள சதை பகுதிகளிலும் நிச்சயம் அதிக வேதனையை அளித்திருக்கும்.

செங்கோல் இராஜாவின் ஆளுகைக்கு அடையாளமாக இருக்கிறது. இயேசுவை கேலி செய்யும் விதத்தில் அவருடைய வலது கையில் கோலை கொடுத்தார்கள் (மத்தேயு 27:29). மட்டுமல்ல, அவருக்கு முன்பாக முழங்காற்படியிட்டு வணங்கி, யூதருடைய ராஜாவே வாழ்க என்று அவரை பரியாசம் பண்ணி, அவர்மேல் துப்பி, இயேசுவின் கையில் கொடுத்திருந்த கோலை பிடுங்கி அவர் தலையில் அடித்து வேதனைப்படுத்தினார்கள்.
தலையில் சூடப்பட்டிருந்த கூர்மையான முள் முடியின் மீது அவர்கள் அடித்ததன் விளைவாக, அவருடைய தலையிலிருந்து இரத்தம் புறப்பட்டு உடல் முழுவதும் வழிந்தோடியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையிலும் போர்சேவகர், தங்கள் கைகளாலும் அவரை அடித்தார்கள் (யோவான் 19:2) என வாசிக்கிறோம். இந்த செயல்களையெல்லாம் ஏதோ ஒருமுறை மட்டும்தான் செய்தார்கள் என எண்ணக்கூடாது. தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்கள் என அறிய முடிகிறது.

இப்படிப்பட்ட அவமானங்களையும், வேதனைகளையும், தாங்கிக் கொண்டு, இயேசு அமைதலாயிருந்தார். எந்த வெறுப்பையும், கசப்பையும் அவர் ரோமப் போர் சேவர்களிடம் வெளிப்படுத்தவில்லை. விசாரணைக் கைதியாக இருந்த இயேசுவின் மீது எந்த குற்றமும் நிரூபிக்க இயலாத நிலையில், இயேசுவுக்கு ஏற்பட்ட அவமானங்கள் தான் இவைகள்.

இயேசு, தலையில் முள்முடியும், சிவப்பு அங்கியும் தரிக்கப்பட்டவராய், தலையிலிருந்து இரத்தம் வடிந்த நிலையில், உடல் முழுவதும் இரத்தம் தோய்ந்த கோலத்தில் வெளியே வந்தார். அப்போது பிலாத்து

யூதமதத் தலைவர்களையும், ஜனங்களையும் நோக்கி, இதோ இந்த மனுஷன் என்றான் (யோவான் 19:5). பிலாத்துவின் இந்த வார்த்தை ஆயிரம் அர்த்தங்களை பொதிந்ததாய் காணப்பட்டது. இயேசுவின் பரிதாபகரமான நிலையைப் பார்த்தாவது, யூதர்கள் இயேசுவை விடுதலை செய்ய சம்பதிப்பார்கள் என பிலாத்து எண்ணினான். ஆனால் அவர்களோ அவரைக் கண்டபோது இவனை சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என சத்தமிட்டார்கள் (யோவான் 19:6, லூக்கா 23:21).

இயேசுவிடம் எந்த குற்றத்தையும், பிலாத்து காணாதபடியால், அவரை விடுதலை பண்ண வகை தேடினான். அதை புரிந்து கொண்ட யூதர்கள், இவனை விடுதலை பண்ணினால், நீர் ரோம இராயனுக்கு சிநேகிதன் அல்ல, விரோதி என சத்தமிட்டார்கள் (யோவான் 19:12). இயேசுவை விடுவித்தால், நீர் யூதேயாவில் தேசாதிபதியாக இருக்க முடியாதபடி செய்துவிடுவோம் என மிரட்டும் விதத்தில் யூதர்களின் கூக்குரல் காணப்பட்டது. ரோமர்களைப் பொறுத்தவரை, தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிற பகுதிக்குள் எப்போதும் அமைதி நிலவுவதையே முக்கிய குறிக்கோளாக கொண்டிருந்தனர். ஒருவேளை இயேசுவை பிலாத்து விடுவித்தால், பிரதான ஆசாரியரும், யூதமதத்தலைவர்களும் ஜனங்களை, பிலாத்துவுக்கு எதிராக தூண்டிவிட்டு நாட்டில் கலவரத்தை ஏற்படுத்தி, நாட்டின் சமாதானத்தை கெடுத்து விடுவர் எனவும், அதனால் தனது பதவி பறிபோய் விடும் என பிலாத்து பயந்தான். எனவே, இயேசுவை மீண்டும் விசாரிக்க ஆரம்பித்தான்.

பிலாத்து, இயேசுவை நோக்கி, நீ எங்கிருந்து வந்தவன்? என்றான். அதற்கு இயேசு எந்த மறுபடியும் அளிக்கவில்லை (யோவான் 19:9). பிலாத்துவின் கேள்விக்கு இயேசு, ஏற்கனவே பதிலளித்திருந்தபடியால் (யோவான் 18:36,37) இப்போது அவர் அமைதலாயிருந்தார். இதனால் கோபடைந்த பிலாத்து தான் ஒரு தேசாதிபதி என்ற அதிகார தோரணையில் இயேசுவை நோக்கி, உன்னை சிலுவையில் அறைய எனக்கு அதிகாரம் உண்டென்றும் உன்னை விடுதலை பண்ண அதிகாரம் உண்டென்றும் உனக்குத் தெரியாதா? என மிரட்டினான். இயேசு அவனைப் பார்த்து, அதிகாரங்கள் அனைத்தும் தேவனால் உண்டாயிருக்கிறது என்றும் தேவன் அனுமதிக்காமல் நீர் என்னை ஒன்றும் செய்ய முடியாது (யோவான் 19:10,11) என மிடுக்காக பதிலளித்தார்.

பிலாத்து, தன்னுடைய பதவியைக் காத்துக் கொள்ள யூதர்களின் நெருக்குதலுக்கு அடிபணிந்தான். அப்பழுக்கற்ற ஒரு நீதிமானை கொலை செய்ய அவன் துணிந்தான். பிலாத்து யூதர்களின் வார்த்தைகளைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்து தீர்ப்புச் சொல்ல நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தான் (யோவான் 19:12,13). பிலாத்து, இயேசுவுக்கு தீர்ப்பளிக்க அமர்ந்திருந்த இடம் கிரேக்க மொழியில் "தளவரிசைப்படுத்தப்பட்ட மேடை" (stone paved platform) எனவும்,

எபிரேய பாஷையில் “கபத்தா” (Gabbatha) என்றும் அழைக்கப்படுகிறது (யோவான் 19:13). இந்த மேடையின்மீது, போடப்பட்டிருந்த நியாயாசனத்தின் மேல் அமர்ந்துதான் நியாதிபதி சட்டப்படியான தீர்ப்பை வழங்குவார்.

பிலாத்து நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி ஆளனுப்பி, நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம் என வேண்டினாள (மத்தேயு 27:19). தன் கணவன் தவறான தீர்ப்பு வழங்கிவிடக் கூடாது என அவள், அவனை எச்சரித்தாள். அப்போது ஜனக்கூட்டம், இவரை அகற்றும், அகற்றும், சிலுவையில் அறையும் என வெறிபிடித்தவர்களைப் போல சத்தமிட்டுக்கொண்டேயிருந்தார்கள் (யோவான் 19:15). அவர்கள் இரக்கம் என்றால் என்ன என்பதை அறியாது போயினார். அவரை சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என ஜனங்கள் எழுப்பிய கூக்குரலும், பிரதான ஆசாரியரும் போட்ட சத்தமும் வரவர அதிகமாகிக் கொண்டே போனதால், இயேசுவை விடுவிக்க வேண்டும் என தான் எடுத்த முயற்சிகளால் எந்த பயனும் இல்லையென பிலாத்து கண்டான்.

இயேசுவிடம் எந்த குற்றத்தையும் காணாத பிலாத்து, தானொரு நியாதிபதி என்ற முறையில் சரியான தீர்ப்பை வழங்க வேண்டும் என்பதை விடுத்து, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாக கைகளைக் கழுவி, இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் (மத்தேயு 27:24) என கூறி தன் பொறுப்பிலிருந்து நழுவி, இயேசுவை சிலுவையில் அறையும்படி யூதர்களிடம் ஒப்பு கொடுத்தான் (யோவான் 19:16).

ரோம அரசாங்கம், குற்றவாளிக்கு சிலுவை மரணத்தண்டனை விதிக்கப்பட்டவுடன் தண்டனையை, காலம் தாழ்த்தாமல் உடனே நிறைவேற்றி விடுவர். அந்தப்படி, இயேசுவுக்கு மரணத்தண்டனை விதிக்கப்பட்டவுடன், தண்டனையை நிறைவேற்றுவதற்காக, அவர் ரோம நூற்றுக்கதிபதி தலைமையிலான நான்கு ரோமப்போர்ச்சேவகர் அடங்கிய குழுவிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர்கள் அவரை பிடித்துக் கொண்டு போய் அவருக்கு உடுத்தியிருந்த சிவப்பான மேலங்கியை கழற்றி விட்டு அவரது வஸ்திரத்தை அவருக்கு அணிவித்தார்கள்

சிலுவை மரணத் தண்டனை பெற்ற குற்றவாளியே, தனது சிலுவையை, தண்டனை நிறைவேற்றப்படும் இடம் வரைக்கும் சிலுவையை சுமக்க வேண்டும் என்பது வழக்கம். எனவேதான், அப்போஸ்தலனாகிய யோவான், அவர் தம்முடைய சிலுவையை சுமந்து கொண்டு போனார் (யோவான் 19:17) என எழுதுகிறார்.

சிலுவை என்பது பொதுவாக இரண்டு மர சட்டங்களால் குறுக்கு நெடுக்கில் இணைக்கப்பட்டிருக்கும். நேராக நிறுத்தப்படும் மரச் சட்டம் அல்லது மரத்தூணுக்கு “ஸ்டைப்ஸ்” (stipes) என்றும் குறுக்கில் இணைக்கப்படும் மரச்

சட்டத்திற்கு "பேற்றிபுலம்" (patibulam) என்றும் பெயர். "ஸ்டைப்ஸ்" என்னும் நெடுக்குச் சட்டத்தின் மேல்பகுதியிலிருந்து இரண்டு அல்லது மூன்று அடிக்கு கீழே குறுக்குச் சட்டமான "பேற்றிபுலம்" இணைக்கப்படும்.

ஒரு சிலுவையின் மொத்த எடை அநேகமாக 300 பவுண்டுகள் அதாவது 136 கிலோ எடை இருக்கும். அதேவேளையில் குறுக்குச் சட்டமான "பேற்றிபுலம்" மட்டும் 75 பவுண்டுகள் முதல் 125 பவுண்டுகள் அதாவது 34 கிலோ முதல் 57 கிலோ வரை எடை இருக்கும். நெடுக்குச் சட்டமான "ஸ்டைப்ஸ்," தண்டனை பெற்றவர் சிலுவையில் அறையப்படும் இடத்தில் உறுதியாக நடப்பட்டிருக்கும். அதேவேளையில், குறுக்குச் சட்டமான "பேற்றிபுலத்தை" தண்டனை பெற்றவர், தனது பின்கழுத்துப் பகுதி, மற்றும் இரு தோள்பகுதிகளின் மேல் பதியுமாறு வைத்து, அது சாய்ந்து விழுந்து விடாதவாறு சமநிலையில் இருக்க தன் இரு கைகளையும் நீட்டி அதை தாங்கி பிடித்தவாறு, தண்டனை பெற்ற இடத்திலிருந்து சிலுவையில் அறையப்படும் இடம் வரைக்கும் சுமந்து செல்ல வேண்டும். பொதுவாக நீட்டப்பட்ட கைப்புஜங்கள், குறுக்குச் சட்டத்தோடு சேர்த்துக் கட்டப் பட்டிருக்கும்.

ரோம நூற்றுக்கதிபதியின் தலைமையில் ரோமப் போர்வீரர்கள் சூழ்ந்துவர இயேசு சிலுவையை சுமந்து சென்றார். உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரைக்கும் இரத்தம் தோய்ந்த கோலத்தில், முதுகில் சதை பிய்ந்த நிலையில், சரீரத்தில் கடும் வேதனையின் மத்தியில், களைப்படைந்த நிலையில் இருந்த இயேசு, சிலுவை சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டார். இயேசு, சிலுவையை சுமக்க முடியாமல் சுமந்தார். அவர் அவர்களுக்கு முன்பாக, சிலுவையை சுமக்க இயலாமல் பலமுறை தரையில் விழுந்தார் என பாரம்பரியமாக நம்பப்படுகிறது. பழைய கத்தோலிக்க பாரம்பரிய கருத்துப்படி இயேசு மூன்றுமுறை தரையில் விழுந்தார் என சொல்லப்படுகிறது.

இயேசு ஒரு அடிமையைப் போலவும், தேசத்துரோகியைப் போலவும், பெருங்குற்றம் இழைத்தவரைப்போலவும், அவமானமாகவும், இழிவாகவும் கருதப்பட்ட சிலுவையை நமக்காக தம் தோள்களின் மேல் சுமந்து கொண்டு சென்றார். இயேசு தம்முடைய சிலுவையை சுமந்து கொண்டு, எபிரேய பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்கு புறப்பட்டுப்போனார் (யோவான் 19:17) என வாசிக்கிறோம். இயேசு அப்போது இருந்த நிலைமையில் சிலுவையை சுமக்க முடியாமல் சுமந்தார். இயேசுவினால் சிலுவையை சுமக்க இயலாது என்பதைக் கண்ட ரோமப்போர்சேவர்கள், அந்த சிலுவையை யார் மீதாவது சுமத்த எண்ணினர். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ரோமப்போர்சேவகரின் கண்களுக்கு தென்பட்டவன் தான் சிரேனே என்ற ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவன். பஸ்கா பண்டிகையை கொண்டாட எருசலேம் வந்த அவனை ரோமப்போர்சேவர்கள் வலுக்கட்டாயமாக, இயேசுவின்

சிலுவையை சுமக்க பணித்தனர். பின்னாட்களில் இந்த சீமோன் இயேசுவை தன் குடும்பத்தோடு இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டான் என அறிய முடிகிறது.

கொல்கொதாவுக்கு இயேசு வந்தபோது வெள்ளைப் போளம் கலந்த திராட்சரசத்தை அவருக்கு குடிக்கக் கொடுத்தார்கள் (மத்தேயு 27:33,34, மாற்கு 15:22,23). இது ஒருவித போதை தரும் காடியாகும். எருசலேமில் வாழ்ந்த இரக்க சிந்தையுள்ள ஸ்திரீகள் சிலுவையில் அறையப்படும் குற்றவாளிகள் மீது இரக்கமுற்று அர்கள் தங்கள் சரீரத்தில் கொடுமையான வேதனையை உணராதிருக்க இவ்வித காடியை கொடுப்பது வழக்கம். அப்படிப்பட்ட காடியை இயேசுவுக்கு வழங்கிய போதோ அவர் அதை ருசிபார்த்து அது காடி (வேதனையை குறைக்கக்கூடியது) என உணர்ந்து உடனே குடிக்க மறுத்து விட்டார். இயேசு மீட்பின் திட்டத்தை சுயசிந்தையோடும் சுயஉணர்வோடும் வேதனையின் கடைசி எல்லைவரைக்கும் சென்று நிறைவேற்ற உறுதியாயிருந்தபடியால் அவர் காடியை ஏற்கவில்லை. தம்முடைய கடைசி மூச்சு உள்ளவரை தம்மைப்பற்றி உரைக்கப்பட்ட தீர்க்கத்தரிசனத்தை (சங்கீதம் 69:21) நிறைவேற்ற வேண்டும் என்பதில் இயேசு மிகுந்த வேதனையின் மத்தியிலும் மிகவும் விழிப்புள்ளவராகவும், உறுதியுள்ளவராகவும் இருந்தார்.

ரோம வரலாற்றில் மிகவும் உச்சகட்ட தண்டனை சிலுவை மரணமாகும். சிலுவை மரணம் என்பது, தாங்க முடியாத அளவு வேதனைத் தரக்கூடியதும், மிகவும் கொடூரமானதும், மிகவும் இழிவானதுமாகும். சிலுவை மரணமானது அடிமைகளுக்கும், தேசத்துரோகிகளுக்கும், பயங்கரவாதிகளுக்கும், கொடுஞ் செயல் புரிந்த குற்றவாளிகளாகிய அந்நியருக்கும் உரியது. அதேவேளையில் ரோமர்களுக்கு இது பொருந்தாது. சிலுவை மரணமானது மிகவும் கொடிய வேதனையை அளிக்கக்கூடியது என அக்கால எழுத்தாளர்கள் குறிப்பிடுகிறார்கள். உள்ளூர் ஜனங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லையெனில், கொலைத்தண்டனை பெற்றவரை பொதுவாக நிர்வாண கோலத்தில் சிலுவையில் அறைந்து தொங்க விடுவது அக்கால வழக்கமாயிருந்தது.

குற்றவாளியை சிலுவையில் அறைவதற்கு முன்பு சாட்டையால் அடிப்பதன் விளைவாக முதுகிலுள்ள சதைகள் பிய்த்து இரத்தம் அதிக அளவில் வெளியேறும். இதனால் குற்றவாளி மிகவும் சோர்ந்து போவார். இந்நிலையில் ரோமப்போர்சேவகர் குற்றவாளியை சிலுவையில் அறைவதற்காக, முதுகு தரையில் படும் விதத்தில் தரையில் தூக்கி வீசுவர். அப்போது தரையிலுள்ள அழுக்குகள், சிறு கற்கள், மண் குப்பைகள் போன்றவை, ஏற்கனவே சாட்டையால் அடிக்கப்பட்டதன் விளைவாக முதுகில் ஏற்பட்ட காயங்களில் ஒட்டிக் கொள்ளும். இந்நிலையில்தான் குற்றவாளி சிலுவையில் அறையப் படுவார். இயேசுவும் இப்படிப்பட்ட விதத்தில்தான் சிலுவையில் அறையப்பட்டார் என நம்பலாம்.

குற்றவாளி சுமந்து வந்த சிலுவையின் குறுக்குச் சட்டத்தில் அவனது இரு கரங்களையும் விரித்து வைத்து கயிற்றினால் கட்டவோ அல்லது ஆணிகளினால் அறையவோ செய்வர். பொதுவாக ஆணிகளினால் அறைவதுதான் ரோமர்களின் வழக்கமாயிருந்தது. இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என்பதை நான்கு நற்செய்தியாளர்களும் உறுதி செய்கிறார்கள் (மத்தேயு 27:35, மாற்கு 15:25, லூக்கா 23:33, யோவான் 19:18).

கைகளில் ஆணிகளால் அறைவது என்பது உள்ளங்கையில் அல்ல மாறாக மணிக்கட்டிலாகும். சிலுவையில் அறையப்பட்டவரின் சரீரம் கீழே விழாமலிருப்பதற்காக மணிக்கட்டில் அறைவது வழக்கமாயிருந்தது. மரணத்தண்டனை பெற்றவரின் இரு கைகளையும் “பேற்றிபுலம்” எனப்படும் குறுக்குச் சட்டத்தில் அறைந்தபின்பு, மரத்தூக்கியின் மூலமாகவோ அல்லது ஏணியின் மூலமாகவோ உயர்த்தி, அங்கே ஏற்கனவே நாட்டப்பட்டிருக்கும் “ஸ்டைப்ஸ்” என்னும் நெடுஞ்சட்டத்தில் உரிய இடத்தில் உறுதியாக பொருத்தி விடுவார்கள். பின்னர் மரணத் தண்டனை விதிக்கப்பட்டவரின் இரு கால்களையும் ஒன்று சேர்த்து, சிலுவையில் அறையப்படுபவரின் சரீரம் நேராக நிற்பதற்கு ஏதுவாக, நெடுஞ்சட்டத்தில் பொருத்தப்பட்டிருக்கும் மரத்திலான துண்டில் (wooden foot rest) கால்கள் பதியும்படி வைத்து ஒரே நீண்ட ஆணியினால் அறைந்து விடுவார்கள். பொதுவாக சிலுவையில் அறையப்படுபவரின் சரீரம், நீண்ட நேரம் தொங்க வேண்டியிருந்ததால் இப்படிச் செய்வது அந்த நாட்களில் வழக்கமாயிருந்தது.

இயேசு அறையப்பட்ட சிலுவை இப்போது நாம் காண்பது போல அழகானதாகவும், நேர்த்தியானதாகவும் வடிவமைக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை. அது கரடுமுரடான இரண்டு மரத்தடிகளால் உருவாக்கப்பட்டதாகும். அந்நாட்களில் பாலஸ்தீனத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள சிலுவைகள் ஒலிவ மரத்தால் ஆனவை என அறிய முடிகிறது. சிலுவையில் அறையப்படும் நபர், பசியினாலும், கொடிய வேதனையிலும், காயங்களிலிருந்து வழியும் இரத்தத்தினாலும் பெலன் குன்றி காணப்படுவார். அந்நிலையில் அவர் மூச்சுவிட முயலும்போது ஒவ்வொரு மூச்சுக்கும் அவரது முதுகு, கரடுமுரடான சிலுவை மரத்தில் மேலும், கீழும் உரசுவதால் தொடர்ந்து இரத்தம் வெளியேறிக் கொண்டிருப்பதோடு அவர் கொடிய வேதனையால் துடிதுடிப்பார்.

சிலுவையில் அறையப்பட்ட நபர் மூன்று அல்லது நான்கு மணி நேரத்திலிருந்து மூன்று அல்லது நான்கு நாட்கள் வரையிலும் கூட உயிரோடிருந்து கொடிய வேதனையை அனுபவித்தவாறே மரணமடைய நேரிடும். சிலுவையில் அறையப்பட்ட நபரின் மரணம் என்பது ரோமப் போர்ச்சேவகர் சாட்டையால் அடிக்கும் தன்மையைப் பொறுத்தது. இருந்தாலும், ரோமப் போர்ச்சேவகர், சிலுவையில் தொங்குபவரின் மரணத்தை விரைவுபடுத்தும் விதத்தில்,

சீக்கிரமாகவே கால் எலும்புகளை முறித்து விடுவர். முப்பத்து மூன்று வயது நிரம்பிய இளைஞனாயிருந்த இயேசு, சிலுவையில் அறையப்பட்ட ஆறு மணி நேரத்திற்குள்ளாக மரணமடைய நேரிட்டது என்பது அவர் எந்த அளவுக்கு சாட்டையால் கடுமையாக அடிக்கப்பட்டார் என்பதை நமக்கு உணர்த்துகிறதாயிருக்கிறது.

சிலுவையில் அறையப்பட்ட நபர் என்ன காரணத்திற்காக சிலுவையில் அறையப்பட்டார் என்பதை அனைவரும் அறிந்துக் கொள்ளும் விதமாக சிலுவையில் தொங்குபவரின் தலைக்கு மேலே, சிலுவையின் நெடுஞ்சட்டத்தில், மேல் விலாசம் தொங்கவிடப்படும். இந்த மேல்விலாசம், தண்டிக்கப்பட்ட நபர் சிலுவையை சுமந்து வரும்போது, அவருக்கு முன்பாக போர்வீரன் ஒருவன் கையில் பிடித்து வரும் பதாகையாகும். இயேசு சிலுவையில் அறையப்பட்டவுடன் அந்த பதாகையும், சிலுவையில் அவரது தலைக்கு மேலாக தொங்கவிடப்பட்டது (மாற்கு 15:26). இந்த தகவலை நான்கு சுவிசேஷர்களும் குறிப்பிடுகிறார்கள் அந்த பதாகையில் அல்லது மேல்விலாசத்தில் “நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா” (யோவான் 19:19) என குறிப்பிடப்பட்டிருந்தது. அது லத்தீன் மொழியில் “JESUS NAZARENUS REX IUDAEORUM” என்பதாகும். “INRI” என்பது லத்தீன் மொழியின் சுருக்கமாகும். யூதருக்கு ராஜாவாக எழும்பினால் அந்த நபரின் நிலைமை இதுவே என விளக்கும் விதத்தில் பிலாத்து இந்த பதாகையை அநேகமாக வைத்திருக்கக்கூடும்.

அந்த மேல்விலாசத்தை அனைத்து தரப்பு மக்களும் படித்து அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எபிரேயு, கிரேக்க, லத்தீன் பாஷைகளில் எழுதப்பட்டிருந்தது (லூக்கா 23:38). யூதர்கள் அறிந்து கொள்ள எபிரேயு மொழியில் எழுதப்பட்டது. ரோமர்கள் புரிந்து கொள்ள லத்தீன் மொழியில் எழுதப்பட்டது. உலகத்திலுள்ள அனைத்து நாடுகளும் தெரிந்து கொள்ள கிரேக்க பாஷையில் எழுதப்பட்டது. அன்றைய நாட்களில் இந்த மூன்று மொழிகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். குறிப்பாக எபிரேய மொழி மார்க்கத்தையும், கிரேக்க மொழி தத்துவத்தையும், லத்தீன் மொழி சட்டதிட்டங்களையும் அளித்தது. உண்மையில் இயேசு ஒருவரே முழு உலகத்திற்கும் “ராஜா” என்பதை அந்த மேல்விலாசம் பறைசாற்றியது.

இயேசுவை சிலுவையில் அறைந்தபோது அவரோடுகூட சிலுவையை சுமந்து வந்த இரு கள்ளர்களையும் அவருக்கு வலது புறமாகவும், இடது புறமாகவும் சிலுவையில் அறைந்தார்கள் இயேசுவை குற்றவாளிகளில் ஒருவராக வெளியுலகத்திற்கு அடையாளம் காட்டவே, இவ்வாறு இயேசுவை சிலுவையை அறைந்தார்கள். இந்த செயலிலும் யூதமதத் தலைவர்களின் தந்திரம் முழுமையாக மறைந்திருந்தது. அதேவேளையில் அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட வேண்டும் (ஏசாயா 53:12) என்கிற தீர்க்கத்தரிசனம் அவரில் நிறைவேற வேண்டும் என்பதை அவர்கள் உணரவோ,

அறியவோ இல்லை. “மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப் பட்டவன் (உபாகமம் 21:23) என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்” (கலாத்தியர் 3:13).

இயேசு, தாங்கமுடியாத வேதனையோடு, இரத்தம் சொட்டச் சொட்ட சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கையில், அந்த வழியாய் நடந்து சென்றவர்கள், அதிகாரிகள், பிரதான ஆசாரியர், வேதபாரகர், மூப்பர், போர்ச்சேவகர், அவரோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்கள் என பலதரப்பட்ட மக்களும் அவரை எள்ளி நகையாடினார்கள்.
தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளெ கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக் கொள். நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரை தூஷித்தார்கள்.

மற்றவர்களை இரட்சித்தான். தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ள திராணி இல்லை. இவன் இஸ்ரவேலின் ராஜாவானால், இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும். அப்போது இவனை விசுவாசிப்போம் என தங்களுக்குள்ளெ பரிகாசம் பண்ணினார்கள், இவன் மற்றவர்களை இரட்சித்தான். இவன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ளட்டும் என இகழ்ந்தார்கள் (லூக்கா 23:35)

தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே. அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால், இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள் (மத்தேயு 27:43)
நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரை பரியாசம் பண்ணினார்கள் (லூக்கா 23:37)

மனுக்குலத்தின் இரட்சிப்புக்கு எந்தவித பங்கமும் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே இயேசு, இப்படிப்பட்ட தூஷணங்கள், இகழ்ச்சிகள், பரிகாசங்கள், நிந்தனைகள் என அனைத்தையும் பொறுமையோடு சகித்தார்.

ஒருவர் உயிரோடிருக்கும் நாட்களில் பேசிய வார்த்தைகளைக் காட்டிலும் அவர் மரணத் தருவாயில் சொல்லும் வார்த்தைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் இயேசு கிறிஸ்து தமது மரணத்தருவாயில் பேசிய ஏழு வார்த்தைகளும் ஆழமான அர்த்தம் பொதிந்தவைகளாகும்.

(அவைகளையே நாம் இந்த இதழில் தொடர்ந்து தியானிக்கிறோம்)

MET MAT MUSIC SCHOOL

என் மீட்பர் சென்ற பாதையில்

Doh : D

Arr. A J K B



இயேசு சிலுவையில் மொழிந்த 7 வார்த்தைகள்

சிலுவை வசனம் 1

"... பிதாவே, இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்."
(லூக்கா 23 : 34)

Rev. Justin Pushparaj
Methodist Tamil Church Borivali,
Mumbai

முகவுரை

'கொல்கொதா' மேட்டினில் சிலுவை மரத்தில் பச்சைக் காயங்களுடன் சொல்லொணா துயரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் போது நிந்தைகளும், பரியாசச் சொற்களும், கேலியான வார்த்தைகளும் மேலும் மேலும் இயேசுவை வேதனை அடையச் செய்த சூழலில் சிலுவையிலிருந்து மெல்லிய சத்தத்தோடு புறப்பட்ட முதல் வார்த்தை "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்" என்பதாகும். மனித வாழ்வில் இறுதி வார்த்தைகள், இறுதி விருப்பங்கள் எப்போதுமே சிறப்பு பெறுகிறது. அந்த வார்த்தைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்ற அந்த மனிதரோடு தொடர்புடையோர் அதிக பிரயாசப்படுவதை உலகின் நாலா திசைகளிலும் சரளமாகக் காணலாம்.

இங்கே சிலரின் இறுதிவார்த்தைகள்

சார்லஸ் ஸ்பர்ஜன் "இயேசு எனக்காக மரித்தார் " என்று கூறி உயிர் துறந்தார்.

மெதடிஸ்ட் சபைகளின் ஸ்தாபகர் ஜாண் வெஸ்லி "அனைத்திலும் மேலானது இறைவன் நம்மோடிருப்பதே" என்று கூறி இவ்வுலக ஓட்டத்தை நிறைவு செய்தார்.

டேவிட் லிவிங்ஸ்டன், தனது இறுதி வார்த்தையாக, ஆப்பிரிக்கர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மன்றாடியபடியே உயிர்துறந்தார்.

ஆனால் கிறிஸ்துவின் ஏழு இறுதி வார்த்தைகளும் இன்றைக்கும் மனித குலத்திற்கு முகம் பார்க்கும் கண்ணாடியாக சிலுவை நாதரின் பாசத்தை உணர்த்துகின்ற பொக்கிஷங்களாகக் காணப்படுகிறன.

"பிதாவே இவர்களுக்கு மன்னியும்" சமய ஆதிக்கவாதிகளால் பொய்க் குற்றசாட்டுக்கு ஆளாகிக் கொடூர மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுச் சிலுவையில் உதிரம் சிந்தச் சிந்தத் தொங்கிக்கொண்டிருந்த இயேசு உதிர்த்த உணர்வுப் பூர்வமான உன்னதமான வார்த்தை 'மன்னிப்பு.'

பழைய ஏற்பாட்டு மன்னிப்பு

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்," இதுதான் பழைய ஏற்பாட்டுக்கால வாழ்வியல் நெறியாக இருந்தது. இதைத்தான் இன்றைய உலகநாடுகள் சித்தாந்தங்களாகப் பெருமையோடு கடைப்பிடிக்கின்றன. இத்தண்டனை முறைகளைப் பார்க்கும் போது பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் கொடூரமானவராக, கல்நெஞ்சக்காரராக, மன்னிப்பருளாதவராகச் செயல்பட்டதாக எண்ணக்கூடும். ஆனால் பழைய ஏற்பாட்டிலும் ஆண்டவர் மன்னிக்கிறவராகவே சாந்த சொரூபியாகவே செயல்பட்டார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒருவர் ஒரு தவறு செய்தால் அந்தக் குடும்பத்தையோ அல்லது அந்த முழு ஊரையோ பாதிக்கப்பட்டோர் அழிப்பது நடைமுறையாக இருந்தது. இதை ஆதி 34:1-7 வரை திருமறைப்பகுதியில் படிக்கலாம். ஏமோரின் குமாரன் சீகேம் யாக்கோபின் குமாரத்தி தீனாளைக் கறைப்படுத்திய செய்தியை அறிந்த யாக்கோபின் புத்திரர்கள் ஏமோரின் பட்டணத்திலிருந்த அனைத்து ஆண் மக்களையும் பட்டயத்தால் கொன்று போட்டு,

உடைமைகள் எல்லாவற்றையும் கொள்ளையிட்டுப் போனார்கள். எனவே நாடோடிகளாக வாழ்ந்துகொண்டிருந்த இஸ்ரவேலரை கட்டுக்குள் கொண்டுவரும்படியாக, நெறிசார்ந்த வாழ்விற்குள்ளாக வாழப் பழக்கப்படுத்தும்படியாக அதிகபட்சம் "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்கிற நெறி அறிமுகப்படுத்தப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் மன்னிப்பு

மத் 5:39 "...ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு." "தீமைக்குத் தீமை" பதில் அல்ல என சுட்டிக்காட்டுகிறார். ஏழுதரம் மட்டுமோ மன்னிக்கவேண்டும்? என்று கேட்ட சீடனிடம், ஏழு தரம் மாத்திரம் அல்ல ஏழெழுபது தரம் மட்டும் என்று கிறிஸ்து மறு மொழி கூறுகிறார். (மத் 18:22) இங்கு மன்னிப்பதில் அளவுகோல் இல்லை எனத் தெளிவுப்படுத்துகிறார்.

பாவத்தில் அகப்பட்ட ஸ்திரீயை நோக்கி "நீ போ இனி பாவஞ்செய்யாதே" என்றார். (யோவான் 8:11) பாவியை இரட்சிக்கவே, தான் உலகத்திற்கு வந்ததை நினைவூட்டுகிறார்.

மேற்குறிப்பிட்டவைகள் இயேசு மானிடத்தில் வாழ்ந்த போது கற்றுக்கொடுத்த மன்னிப்பின் மாட்சிமைகளில் சில விலைமதியா முத்துக்கள்.

சிலுவையில் சிலுவைநாதரின் மன்னிப்பு

'இவர்களுக்கு மன்னியும்' என்று இயேசு யாரைக் குறித்து மன்றாடினார்?

இறையியலாளர்கள் இரண்டு கருத்துக்களை முன்வைக்கிறார்கள்

- ரோமப் போர்வீரர்கள் தங்களுக்கு இடப்பட்ட கட்டளையைத் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் நிறைவேற்றினார்கள். எனவே இயேசு இவர்களுக்காகவே மன்றாடினார் என்று சிலர் வாதங்களை முன்னெடுக்கிறார்கள்.
- ரோமப் போர் வீரர்கள் தங்களுக்கு இடப்பட்ட கட்டளையையே நிறைவேற்றினர். எனவே அவர்கள் எவ்விதத்திலும் குற்றவாளிகள் அல்லர். எனவே இயேசு அவர்களுக்காக மன்றாடவேண்டிய அவசியம் இருந்ததில்லை. ஆகையால் யூதமக்களுக்காகவே இயேசு மன்றாடினார் என்று கூறுவோரும் உள்.

அசாதாரணமான நிலையில் பல வேதனைகளுக்கு மத்தியில் கனிவான ஆனால் தீர்க்கமான இந்த இறைவேண்டலை இயேசுவால் எப்படி ஏறெடுக்க முடிந்தது? மத் 4- ம் அதிகாரத்தில் தீயோன் தன்னைச் சோதித்த போதும் சரி அல்லது இந்த வேதனையான மணித்துளிகளிலும் சரி இயேசு ஒருபோதும் நிதானத்தை இழந்து போனதில்லை, உணர்ச்சிவசப்பட்டதில்லை, அவசரப்பட்டு எதையும் பேசியதுமில்லை, கோபத்தால் கொந்தளித்ததுமில்லை பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வந்தபடியால்' வலியிலும் பிதாவினால் அருளப்பட்ட சமாதானத்தை அநுபவிக்கிறவராக மிக நிதானமாக, மிகச் தெளிவாகச் செயல்பட்டார். மத் 6: 44 -ல் தனது போதனையின் படியே எதிரிகளைச் சிநேகித்து

அவர்களுக்காகப் பிதாவிடம் இறைவேண்டல் செய்கிறார். கிறிஸ்தவம் பேச்சில் அல்ல செயலில் என்பதை வெளிப்படுத்துகிறார்.

இயேசுவின் முன் மாதிரியைப் பின்பற்றி நிலத்தில் விழுந்த முதல் கோதுமை மணியான ஸ்தேவானும் இயேசுவையே பின்பற்றுகிறார். அப் 7:60 “அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள் மேல் இந்த பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.”

இறைச் சமாதானம், தேவனோடு நல் ஐக்கியம், இறைச் சித்தத்தை நிறைவேற்ற முயற்சி போன்ற உணர்வுகளோடு எத்தகைய சூழலிலும் நிதான மிழக்காமல் செயல்படும் இறைச் சாட்சிகளாய் நிற்கமுடியும் என்பதற்குக் கிறிஸ்துவின் சிலுவையின் முதல் தொனி சிறந்த சான்றாக இன்றளவும் பிரகாசிக்கிறது.

நிறைவுரை

‘பழிக்குப்பழி’ என்ற சிந்தனைகள் மேலோங்கி நிற்கிற இவ்வுலகச் சூழலில் ஏசாயா 53:12-ன் படி அளவில்லாத சரீர வேதனையையும், மானிடர்களின் பாவங்களையும் சுமந்துக் கொண்டிருக்கிற வேளையிலும் அக்கிரமக்காரருக்காகப் பிதாவிடம் பரிந்துரைக்கிறார். இது இயேசுவின் தூய்மையான உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது. இன்று கசப்புகள், கோபங்கள், வெறுப்புகள், வைராக்கியங்கள், விரோதங்கள் சகமனிதரின் மீதும், சகவிசுவாசிகளின் மீதும் ஏற்படுவதால் அவர்களுக்காக ஜெபிப்பதற்கும், மன்னிப்பதற்கும், நேசிப்பதற்கும், முடியாமல், ஏன், அவர்களின் முகங்களைக் கூட பார்க்க விரும்பாத அவல நிலை இன்றையக் கிறிஸ்தவத்தில் பழக்கமாகிப்போனது.

அன்பர்களே! சமீபத்தில் திரு. ராகுல் காந்தி அவர்கள் புதுச்சேரியில் ஒரு கல்லூரியில் ஒரு மாணவி கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும் போது தனது தந்தையைக் கொன்றவர்கள் மீது கோபமோ, வன்மமோ தனக்கு இல்லை. அவர்களை நான் மன்னித்துவிட்டேன் எனப் பதிலளித்தார். இன்று நாமும் கூட சில நேரங்களில் அவமானங்களைச் சந்திக்கிறோம், துன்புறுத்தப்படுகிறோம், ஒடுக்கப்படுகிறோம், முதுகில் குத்தப்படுகிறோம், ஏமாற்றப்படுகிறோம், ஆனாலும் சிலுவைநாதரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி மத். 6:12-ன் படி தீமை செய்கிறவர்களை மன்னிப்போம்! ஆயிரம் தலை முறைமட்டும் மன்னிக்கிறவரிடம் மன்னிப்பைப் பெறுவோம்! இறைச் சமாதானத்துடன் வாழ்வோம்..!



சிலுவை வசனம் 2

இயேசு அவனை நோக்கி "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார்

(லூக். 23:43)

J. ஜாண் டேனியேல்
கொற்றிகோடு

சிலுவையிலிருந்து இயேசு சொன்ன இரண்டாவது வார்த்தை இதுவாகும். இயேசுவோடு சிலுவையிலே அறையப்பட்டிருந்த ஒரு குற்றவாளி பரதீசைப் பெறுகின்ற ஓர் அற்புத நிகழ்வை இங்கே நாம் காண்கின்றோம். கொடிதான உடல் வேதனையில் சிலுவையில் தொங்கும் மூவரின் உரையாடலை நாம் காண்கின்றோம். மூவரின் உரையாடல் அவர்களது உள்ளத்தைப் படம்பிடித்து நமது கண்முன் நிறுத்துகிறது. அரிதினும் அரிதாக, மரணத்தின் விளிம்பிலும் கிரியை செய்யும் கிறிஸ்துவின் மீட்பின் செயலின் மகத்துவத்தையும் நாம் காண்கின்றோம்.

அவர்களது உரையாடலைப் பார்ப்போம்:

குற்றவாளிகளில் ஒருவர், "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்" என்று அவரை (இயேசுவை) இகழ்ந்தார் (லூக். 23:39)

அந்தக் குற்றவாளி இகழ்ந்து பேசியது, அவரது சொந்தக் கருத்தா என்பது உறுதியாகத் தெரியவில்லை. சிலுவையின் அடிவாரத்தில் நின்றுகொண்டிருந்த அதிகாரிகளும் போர்ச் சேவகர்களும் பேசிய அதே தொனியில்தான் அவரும் பேசினார் (லூக்.23:35,36).

ஆனால் மற்றக் குற்றவாளி அவருக்குப் பதில் சொல்கின்ற அழகைப் பாருங்கள், "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும்

தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். அவரோ தகாததென்றையும் நடப்பிக்கவில்லையே" என்று அவரைக் கடிந்து கொண்டு, இயேசுவை நோக்கி, "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றார் (லூக்.23:41-42).

அவரது வேண்டுகோளுக்கு உடனடியான பதில் வந்தது.

இயேசு அவனை நோக்கி, "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்-" என்றார் (லூக்.23:43)

இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்தக் குற்றவாளியின் உள்ளம், அந்தக் கொடூர மரண வேதனையின் மத்தியிலும் சந்தோஷத்தில் சிறகடித்துப் பறந்தது.

இப்போது நாம் செய்திக்குள் வரலாம். அந்தக் குற்றவாளி இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளக் காரணங்கள் என்ன?

1. அந்தக் குற்றவாளி தன் தவறை உணர்ந்தான்:

அவர் தனது சக குற்றவாளியைக் கடிந்துகொண்டு இப்படிச் சொன்னார், "நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்." அவர் தன் தவறை உணர்ந்து, அறிக்கை செய்தார். மனச்சாட்சி மழுங்கிப் போகாத மனிதன் இவர். வழக்கமாக, ஒரு குற்றவாளி தன்னைச் சுற்றி இருப்போரையும் குற்றவாளிகளாகக் காட்டி, தனது குற்றத்திற்கு நியாயம் தேடுவதுதான் இயல்பான உலக நடைமுறை. அதைத்தான் முதல் குற்றவாளி செய்தார். ஆனால் மற்றவரோ தனது குற்றத்தை அறிக்கை செய்தார்.

நோயுற்றவனுக்குத்தான் மருத்துவர் தேவை, பாவிக்குத்தான் இரட்சகர் தேவை. இதை இயேசுவே சொன்னார். தான் பாவி என்று ஒத்துக்கொள்ளாத ஒருவருக்கு இரட்சிப்பு இல்லை. ஏனெனில் அவரைப் பொறுத்தவரை அவர் பாவியே இல்லையே? பிறகு எதற்கு இரட்சிப்பு? நமது பாவ வாழ்வுக்கு நாம் நியாயம் கற்பித்துக்கொண்டே இருந்தோமானால், மீட்பும் நம்மை விட்டு விலகிச் சென்றுகொண்டேதான் இருக்கும்.

2. இயேசுவை ஆண்டவர் என்றும் தகாததொன்றையும் நடப்பிக்காதவர் என்றும் ஏற்றுக் கொண்டார்:

ஒருவர் துன்புறும்போதும், தண்டனை பெறும்போதும், அவரது நிரபராதித்துவத்தைப்பற்றி நாம் அறிந்திருந்தாலும் கூட அவரது நேர்மையையும் நற்குணத்தையும் நாம் சந்தேகிப்பதுண்டு. 'வெளி வேஷமாய் வாழ்ந்திருப்பாரோ?' என நாம் எண்ணுவதுண்டு.

ஆனால் இங்கே பாருங்கள், இயேசு குற்றவாளிகள் மத்தியில் ஒரு குற்றவாளியாகத் தொங்குகிறார், சிலுவையினடியில் நிற்போரும் அவரைக் கேலி பேசுகின்றனர். அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்த இயேசு ஒன்றுக்கும் இயலாதவர்போல் சிலுவையில் தொங்குகிறார். இந்தச்

சூழலிலும், அந்தக் கூற்றுக்களால் தாக்கம் பெறாமல், ஒருவர் இயேசுவைக் குற்றமற்றவர் என்றும் ஆண்டவர் என்றும் அறிக்கையிடுகிறார் என்றால், அவரது விசுவாசத்தின் பிரம்மாண்டத்தை என்னென்பது? இந்தக் குற்றவாளி இயேசுவை நன்றாய் அறிந்திருந்தவர்.

இயேசு வாழ்ந்த காலத்தில் அவரைப் 'போதகர்' என்றும் 'ரபி' என்றும் ஏற்றவர்கள் அவரிடமிருந்து மீட்பைப் பெறவில்லை. அவரை ஆண்டவராக ஏற்றவர்களே மீட்பைப் பெற்றனர். வேதபாரகர்கள் பரிசேயர்களுக்கெல்லாம் இயேசு எப்போதும் போதகராகத்தான் இருந்தார். ஏன், சீடனான யூதாசுக்கும் அவர் போதகரே. அவர்கள் எவரும் மீட்பைப் பெறவில்லை.

இயேசுவை ஆண்டவராக ஏற்போர் மட்டுமே மீட்பைப் பெறுவர்.

3. குற்றவாளி, தன்னை நினைத்தருளும்படி இயேசுவை வேண்டினார்:

இந்த மனிதருக்கு, தனது பாவங்களை அறிக்கையிடத்தான் முடியுமே ஒழிய அவற்றுக்குப் பரிகாரம் செய்வதற்கான கால அவகாசம் இல்லை. அவர் மரணத்தின் விளிம்பில் நிற்கிறார். ஆனால் உருக்கத்தோடு ஆண்டவரை வேண்டினார், 'என்னை நினைத்தருளும்' என்று. யாரைப் பார்த்து, தன்னை நினைத்தருள அவர் வேண்டினார்? தன்னைப் போலவே சிலுவையில் தொங்கிக் கொண்டிருப்பவரைப் பார்த்து, தன்னைப் போலவே மரித்துக் கொண்டிருப்பவரைப் பார்த்து.

மரணத்துக்கு அப்பால் இருக்கின்ற நித்திய வாழ்வைக் குறித்த திடமான அறிவும் நம்பிக்கையும் உள்ள ஒருவருக்குத்தான் இந்த விசுவாசம் சாத்தியப்படும்.

'வரும்போது' என்றுதான் அவர் இயேசுவை வேண்டினார். ஆனால் இயேசுவோ 'இன்றைக்கே' என்று அவருக்குப் பதிலுரைத்தார். அன்றைக்கே அவரை இரட்சித்தார்.

பலரும் கேட்கும் ஒரு கேள்வி, 'இந்தக் குற்றவாளியைப் போல நானும் கடைசி நேரத்தில் இயேசுவிடம் வந்தால் போதாதா?'

இந்தக் குற்றவாளி கடைசி நேரத்தில் இயேசுவிடம் வந்தார் என்று யார் சொன்னது? நிச்சயமாக இல்லை. கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்.

- இயேசு 'தகாததொன்றையும் நடப்பிக்காதவர்' என்று அறிக்கை செய்தாரே அந்தக் குற்றவாளி, அதை அவர் எப்படி அறிந்திருந்தார்? இயேசுவின் ஊழியப் பாதை நெடுகவே அவரை அவர் நன்கு அறிந்திருந்ததால் அல்லவா?
- 'உம்முடைய இராஜ்ஜியத்தில் வரும்போது' என்று சொன்னாரே, அது எந்த ராஜ்ஜியம்? மரித்துக் கொண்டிருக்கும் இயேசுவுக்கு ஒரு ராஜ்ஜியம் இருக்கிறதென்பதும் அது இவ்வுலகத்துக்கு உரியதல்ல என்பதும் அவருக்கு எப்படித் தெரியும்? இயேசுவின் சீடர்களே இயேசுவின் உலக அரசை எதிர்பார்த்து, 'இடது பக்கத்தையும் வலது பக்கத்தையும்' கேட்டார்களே, அவர்களைவிட அதிகமாக இவர் அறிந்ததெப்படி? இவர் ஆழமான

ஆன்மீக அறிவுள்ள விசுவாசியாக இருந்ததால் அல்லவா?

- மரித்துக்கொண்டிருக்கும் ஒருவர், தன்னைப்போலவே மரித்துக் கொண்டிருக்கும் மற்றொருவர் தன்னை இரட்சிப்பார் என்று எப்படி நம்ப முடிந்தது? இயேசு 'ஆண்டவர்' என்றும் அவர் உயிர்த்தெழுவார் எனவும் அவர் அறிந்திருந்ததினால் அல்லவா?

இந்தக் குற்றவாளி இறுதி வேளையில் இயேசுவிடம் வந்தவரல்ல. அவர் இயேசுவையும் அவரது போதனைகளையும் நன்றாய் அறிந்து அவற்றை ஏற்றுக்கொண்டிருந்தார். அவரது ஆத்துமா ஏற்கனவே ஆயத்தமாக இருந்தது. ஆனால் இயேசுவைச் சந்திக்கும் வாய்ப்பு மரணத்தின் விளிம்பில்தான் அவருக்கு வாய்த்தது. தொட்டவுடன் கைகளில் விழுந்துவிடுமளவுக்குக் கனிந்து நின்ற பழம் அது.

லாசருவின் சகோதரியாகிய மார்த்தாளிடம் இயேசு சொன்ன ஒரு வாசகத்தையை நினைவில் கொள்வோம். 'என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்' (யோவான்.11:25,26)

என்றென்றைக்கும் மரிக்காதவர் வரிசையில் இந்தக் குற்றவாளி வந்துவிட்டார். அவர் உலகில் மரித்தார், அந்நேரமே பரதீசில் கண் விழித்தார். அவருக்கு என்றைக்கும் மரணமில்லை.

நிறைவாக ஒன்று மட்டும் பார்க்கலாம். 'பரதீசு' என்றவுடன், அது என்ன? எங்கிருக்கிறது? என்ற கேள்விகளை எழுப்புகின்றனர் பலர். இப்படிக் கேட்டு, தேவையற்ற குழப்பத்தில் ஆழ்ந்துவிட வேண்டாம். இயேசு சொன்னார், 'என்னுடனே கூட பரதீசில் இருப்பாய்' என்று. ஆம், 'பரதீசு' என்பது இயேசு இருக்குமிடம். அங்கே நாமும் அவரோடு கூட இருப்போம். இது போதாதா?

அது போதும் எங்கள் ஆண்டவரே, உம்மோடு கூட இருக்கும் பாக்கியத்துக்கு உரியவர்களாய் எங்களை மாற்றும்.

சிலுவை வசனம் 3

"அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார்."
"பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார் அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்."
(யோவான் 19:26,27)

S. மெர்லின்
கண்ணனூர்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மொழிந்த மூன்றாவது வார்த்தை இது. மனித உறவுகளின் முக்கியத்துவத்தை இது வெளிப்படுத்துகிறது. இந்தவார்த்தையை இயேசு சொல்ல வேண்டியதின் அவசியம் என்னவென்பதையும், இவ்வார்த்தைக்குப் பங்குள்ளவர்களைக் குறித்தும் ஒரு சில உண்மைகளைத் தியானிப்போம்.

பட்டயத்தால் குத்தப்பட்டமரியாள்.

"உன் ஆத்துமாவையும் ஒருபட்டயம் உருவிப் போகும் என்றான்." (லூக்கா 2:35) சிமியோன் தேவாலயத்தில் வைத்து மரியாளிடம் சொன்ன வார்த்தை இது. உண்மையில் சிமியோன் ஒரு பெரிய தீர்க்கதரிசியே, "உன் ஆத்துமாவையும் ஒருபட்டயம் உருவிப் போகும்" என்று, மரியாளை மட்டும் சொல்லக் காரணம், யோசேப்பு வேதனைப்பட அப்போது உயிரோடு இருக்கமாட்டார் என்பதைக் கூட அவர் அறிந்திருக்கிறார்.

மரியாளுக்கு எது பட்டயம் குத்தியது போல் வேதனையாயிருந்தது?

- நன்மை பெற்றவர்கள் எல்லாம் அவருக்கு எதிராகச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் எனக் கத்தினார்களே அதுவா?
- சாட்டையால் சதை கிழிய,

இரத்தம் சொட்ட, அடித்துத் துவைத்தார்களே அதுவா?

- எச்சில் துப்பி, தேவையற்ற வார்த்தைகளைச் சொல்லி எள்ளி நகையாடினார்களே அதுவா?
- சிலுவை சுமக்க முடியாமல் மூன்று முறை தன் கண்முன் விழுந்தாரே அதுவா?
- சிலுவையில், கைகளிலும் கால்களிலும் முழு நீள ஆணி அடித்தார்களே அதுவா?

இவைகள் அனைத்துமே மரியாளை வேதனைப்படுத்தியது உண்மைதான், ஆனால் ஒரு தாயாக மரியாளின் பார்வையில் எது பட்டயம் போல குத்தியிருக்கும் எனச் சிந்தித்தால். தன் கண் முன்னே, தன் செல்லப் பிள்ளையை, வாலிப வயதில் இருக்கிற மகனை, நிர்வாணமாக்கி, எள்ளி நகையாடி, அடித்து, உதைத்து, ஆணியடிக்கும் போது, தன் பிள்ளையைக் காப்பாற்ற நாதியற்ற நிலையில் நிர்கதியற்று ஒரு தாய் இருப்பாளானால் அவள் வேதனையையும், கண்ணீரின் அளவையும் அளவிடவே முடியாது, இதைவிட ஒரு தாய்க்கு வேறு வேதனை உண்டா என்று சொல்ல முடியவில்லை.

சிறு குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடும் போது பல தாய்மார்கள் அவ்விடத்தில் நிற்பதில்லை காரணம் ஏதுமறியா பிள்ளையின் வலியைத் தங்கள் மனதால் தாங்க முடிவதில்லை, அளவில் மிகச் சிறிய குருவிகள் கூட தங்கள் குஞ்சுகளைக் காப்பாற்ற விஷப்பாம்புகளோடு சண்டை போடும் சூழ்நிலையில்

அதிகாரமிக்க ரோமப் போர்ச்சேவகர்கள் மத்தியில், கணவனை இழந்த, சாதாரண ஒரு ஏழைப் பெண்ணாய் ஒன்றும் செய்யமுடியாமல், தன் குமாரன் பாடுகளைப் பார்ப்பதற்கும் முடியாமல், விட்டுவிட்டுச் செல்லவும் மனமில்லாமல், நிர்கதியற்ற ஒரு பெண்ணாய் மரியாளின் வேதனையை எழுத்தால் எழுத முடியவில்லை.

அப்படியிருந்தும் மரியாளுக்கு ஆறுதலாலிருந்தது என்னவென்றால், இது தெய்வக்

குழந்தை, ஆகையால் அதற்கு நடப்பதெல்லாம் தேவத் திட்டமே என்பதைத் தெளிவாய் அறிந்திருந்தாள். பரிசுத்த ஆவியானவர் மரியாளைச் சந்தித்தது முதல் சிலுவை வரை, இயேசு யார் என்பதைத் தெளிவாக அறிந்தவர் இவரை விட யாருமில்லை. அவருக்குதத் தெரியும் பிதாவின் சித்தமில்லாமல் இயேசுவை யாரும் தொடமுடியாது என்று. வேதனையின் மத்தியிலும் இந்நினைவுகள் அவளுக்குச் சற்று ஆறுதலே.

கடமையை நிறைவேற்றிச் செல்லும் மகன்

பல நேரங்களில் நம் பெற்றோர்கள் அடிக்கடி சொல்வார்கள், நண்பர்கள், வெளி உலகம் எப்போதும் கூட வராது, உனக்கு ஒரு கஷ்டம் என்றால் நாங்கள் தான் வர வேண்டும் என்பார்கள், அது இயேசுவின் விஷயத்திலும் பொருந்தியதோ என்னவோ, எப்போதும் இயேசுவைச் சுற்றியிருந்த சீஷர்களில் (யோவானைத் தவிர) யாரையும் சிலுவைக்கருகில் காணவில்லை, ஆனால் தாயாகிய மரியாள் அங்குநிற்கிறாள்.

பொதுவாக வேதனையில் இருப்பவர்களுக்கு, சுகமாய் இருப்பவர்கள் ஆறுதல் சொல்வார்கள், ஆனால் இங்கு எதிர்மாறாக நடக்கிறது, வேதனையில் இருக்கிற இயேசுக்கிறிஸ்து தன் தாய் மரியாளின் வாழ்வுக்காய் பேசுகிறார். மரியாளுக்கு இயேசு கொடுத்த மிகப்பெரிய அந்தஸ்து என்று கூட இதை நாம் சொல்லலாம். இயேசுவின் இந்த அன்பு மரியாளின் உள்ளத்தை இன்னும் அதிகமாய் உடைத்திருக்கும், மரிக்கப் போகும் நேரத்திலும் என்னையல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறான். இப்படி ஒரு பிள்ளையைப் பெற என்ன தவம் செய்தேனோ! என்று அழுகை நிறைந்த ஆனந்தக் கண்ணீரும் ஒரு நிமிடம் மரியாளுக்கு வந்திருக்கலாம்.

இயேசுதன் தாய்க்கு அடைக்கலமாக யோவானை நியமிக்கிறார். என்ன இருந்தாலும் ஒருதாய் சொந்தப் பிள்ளையோடு செலவிடும் மகிழ்ச்சியான நாட்களை இன்னொரு நபர் நிரப்ப முடியாது, அது இயேசுவுக்குத் தெரியும், ஆயினும் தன் சூழ்நிலையில் வேறு ஏதும் செய்ய நிர்கதியற்றவராய், தன் தாயின் ஆதரவுக்காய் யோவானை நியமிக்கிறார்.

பத்துக் கற்பனைகளில் ஒன்றான, பெற்றோரைக் கனம்பண்ண வேண்டும் என்கிற கட்டளையை இயேசு நிறைவேற்றுகிறார். தாமே மரணத்தை ஏற்று உலகை விட்டுப் பிரிவதால், பெற்றோரைக் கவனிக்க வேண்டிய மூத்த மகனின் பொறுப்பையும் தமக்கு அன்பான சீடனிடம் ஒப்படைக்கிறார்.

இன்றையக் காலச் சூழலில் அதிகமாக தியானிக்கப்பட வேண்டிய நிகழ்வு இது.

பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை இது பிரதிபலிக்கிறது. என் தாயின் எதிர்காலம் என்ன? என் தந்தையின் எதிர்காலம் என்ன?, நான் தூரத்தில் இருக்கும் போது என் பெற்றோரை யார் கவனிப்பது? என் பெற்றோர்கள் கையில் பணம் இருக்கிறதா? வயதாகும் போது அவர்கள் தேவை என்ன?,

அவர்கள் ஆரோக்கிய வாழ்வுக்கு நான் என்ன செய்யவேண்டும்? ஒரு மகனாக, ஒரு மகளாக என் பொறுப்பு என்ன?

இவைகளுக்கான பதிலைக் குற்றுயிரான வேதனையின் மத்தியிலும் “ஸ்திரீயே, அதோ, உன் மகன்” என்று சொன்ன இயேசுவினிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்.

இயேசுவின் அன்பான சீடன்

யோவான், இவர் எதிலும் தீவிரவாத குணமுடையவர். இயேசுவை ஏற்றுக் கொள்ளாத சமாரிய நகரத்தை அழித்துப் போடத் துடித்தார். (லூக் 9:54). இயேசுவை, “உலக அரசராக” நினைத்து, அவருடைய அருகில் இருக்க ஆசைப்பட்டார் (மாற் 10:37). இயேசுவோடு எந்தத் துன்பமும் படத்தயாராயிருந்தார். (மத் 20:22). இயேசுவின் பணியில் மற்ற அப்போஸ்தலர்களைவிட யோவானுக்குச் சிறப்பிடம் இருந்தது. உதாரணமாக, யோவான், பேதுரு, யாக்கோபு ஆகிய மூன்று பேரும் இயேசுவின் மூன்று முக்கியமான பணிகளில் உடனிருக்க அனுமதிக்கப்பட்டனர். யாயீரின் மகளை உயிர்ப்பித்தபோது (மாற் 5:37), உருமாற்றத்தின் போது (மாற் 9:2), பாஸ்கா உணவு தயாரிக்க அனுப்பியபோது (லூக் 22:8). மேலும் இறுதி உணவில் இயேசுவின் மார்போடு சாய்ந்திருந்தவர் (யோவா 13:23). இயேசுவின் உயிர்ப்பைச் சந்திக்க கல்லறைக்கு முதலில் ஓடியவர் (யோவா20:2,8), எல்லா அப்போஸ்தலரையும் விட மிகவும் முதிர்ந்த வயது வரை வாழந்தவர் யோவா (21:23).

இவைகளையெல்லாம் பார்க்கும்போது தகுதியான ஒரு சீஷனிடம்தான் தன் தாயை ஒப்புகொடுக்கிறார் என்பது தெளிவாகிறது.

மரியாளை உயர்த்தும் இயேசு

ஒரு முறை மரியாளும்

இயேசுவின் சகோதரரும் இயேசுவைப் பார்க்கவந்த பொழுது. ஆண்டவர் சொன்ன பதிலை கீழ்காணும் வசனங்களின் வழியாகப் பாருங்கள்.

"அப்பொழுது, ஒருவன் அவரை நோக்கி: உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மோடே பேச வேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்றான்."

"தம்மிடத்தில் இப்படிச் சொன்னவனுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி,"

"தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே!"

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிறான் என்றார்." (மத்தேயு 12: 47-50)

இயேசு இப்படிச் சொல்லும் போது, அந்நேரத்தில் கூடியிருந்த சீஷர்கள், விசுவாசிகள். ஒரு வேளை மரியாளைத் தங்களைவிடக் கீழானவர் என்று நினைத்திருக்கலாம். தாங்கள் தான் தேவசித்தத்தை நிறைவேற்றுபவர்கள் என்று கூட பெருமைப்பட்டிருக்கலாம். உண்மையில் இயேசு சொல்ல விரும்பியது சரீரபிரகாரமான உறவுகளைவிட, ஆவிக்குரிய உறவுகளே முக்கியம் என்பதைப் புரிய வைக்கவே ஆண்டவர் இப்படிச் சொன்னார்.

ஆனால் இன்று, ஆண்டவர் சிலுவையிலிருந்து தன் சீஷனிடம் மரியாளை ஒப்படைக்கும் போது, மரியாள் தனக்கு எவ்வளவு முக்கியமானவர் என்பதை உணர்த்துவதோடு மட்டுமல்ல, தன் தாய் தேவசித்தத்தை நிறைவேற்றியதில் முதன்மையானவள் என்னும் பெருமிதத்தோடு, ஆண்டவருக்காய் பணிசெய்பவர்கள் ஒருவருக்கொருவர் தாயும் தந்தையும், சகோதரரும் சகோதரிகளுமாம் என்னும் உறவோடு, இவரை ஒரு போதும் உங்களைவிட்டுப் பிரிக்கக்கூடாது என சீஷர்களுக்கு உத்தரவிடும் அடையாளமாய் யோவானிடம் ஒப்படைக்கிறார். ஆம் தேவசித்தத்தை நிறைவேற்றிய பெண்களில் இவருக்கு நிகர் இவர்தான். தன் மகனை கருவறையிலிருந்து, தன் மகனின் கல்லறை வரை கூட இருந்து கவனித்து இறைச் சித்தத்தை நிறைவேற்றினார், உண்மையிலே இவர் ஸ்தீரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவர்.

நிறைவுரை

புது உறவின் துவக்கமாக அமையும் இந்த வார்த்தை "அதோ, உன் மகன்" "அதோ, உன் தாய்"- விடுக்கும் அழைப்பு என்னவெனில், இவ்வுலகத்தில் ஆதரவற்றிருக்கும் மற்றும் பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியவர்களை உங்கள் தாய், தந்தையாக ஏற்றுக்கொள்ளுங்கள். பெற்றோரால் கைவிடப்பட்ட மற்றும் பெற்றோரை இழந்த பிள்ளைகளை உங்கள் மகனாக மகளாக ஏற்றுக்கொள்ளுங்கள், தேவ சித்தத்தைச் செய்யும் தாய், தந்தையாக, சகோதர சகோதரிகளாக இவ்வுலகில் வாழுங்கள் என்பதே!



சிலுவை வசனம் 4

"ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமாசபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்."

(மத்தேயு 27: 46)

S. மெர்லின்
கண்ணனூர்

இயேசு சிலுவையில் மொழிந்த நான்காம் வார்த்தை இது, மிகப்பெரிய விவாதத்திற்குள்ளாக்கப்படும் வார்த்தை இது. இஸ்லாம் சகோதரர்கள் இயேசு கடவுள் அல்ல என்று நிரூபிப்பதற்காக அடிக்கடி கோடிட்டுக் காட்டும் வார்த்தை இது, பிதாவும் குமாரனும் சமம் அல்ல என்பதற்காகவும், இயேசு ஒருமனிதன் மாத்திரமே என்பதற்காகவும், இந்த வார்த்தையைப் பலர் பயன்படுத்துவார்கள்.

இன்னொரு பக்கம் கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள், பிதாவும், குமாரனும் பிரியவில்லை, பிதா இயேசுவைக் கைவிடவில்லை, இந்த வார்த்தை வேறு அர்த்தத்தில் சொல்லப்பட்ட வார்த்தை என வித்தியாசமான சில விளக்கத்தைக் கொடுப்பார்கள்.

இப்படிப்பட்ட பல கேள்விக்கணைகளோடு நிற்கும் இந்த வார்த்தை, உண்மையிலே உயரிய ஆழங்கள், உண்மைகளைக் கொண்டவார்த்தை. அதைக் குறித்து விரிவாகத் தொடர்வோம்.

பிதா, இயேசுவைக் கைவிட்டாரா?

பலருடைய பதில், வெளிச்சத்தில் இருளைத் தேடுவது போல இது சாத்தியமில்லாதது என்பதே, காரணம், "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்." (யோவான் 10:30)

“அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.” (யோவான் 17:21),

“நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்ளூ நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.” (யோவான் 17:11).

“பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்.” (1யோவான் 5:7),

மேற்காணும் வசனங்கள் பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பவர்கள், அவர்கள் பிரிவதில்லை எனத் தெள்ளத்தெளிவாகக் கூறுகிறது. இப்படி இணைத்திருக்கும் பிதாவும் குமாரனும், பிரிந்திருக்க முடியுமா? அல்லது பிதா இயேசுவைக் கைவிட்டிருப்பாரா? என்பவை தான் இங்கு மிகப் பெரிய கேள்விகளாக எழும்புகிறது.

பிதா கைவிடவில்லை என்றால் எதற்கு இயேசு “என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்” என்று கத்தவேண்டும்.

அப்படியானால் இயேசு உரக்கச் சத்தமிட்டது பொய்யா? கைவிடப்படவில்லை என்றால் ஆண்டவர் சும்மா சொல்லியிருப்பாரோ! என்னும் பல கேள்விகள் எழும்பும்

உண்மையில் இது நாடகமும் அல்ல, இயேசு பொய்யும் சொல்லவில்லை. இயேசு பிதாவால் கைவிடப்பட்டார் என்பதே நூற்றுக்கு நூறு உண்மை. அது ஏன் என்பதைச் சுருக்கமாய் தியானிப்போம்.

மீட்பின் திட்டம்

ஆதாம் பாவம் செய்தான், பாவத்தின் விளைவாக வேதனைகளும், சாபங்களும் மரணமும் உலகில் வந்தன, உண்மையில் மனிதன் மரணத்திற்காய் படைக்கப்பட்டவன் அன்று, அவன் நித்திய நித்தியமாய் தேவனோடு இணைந்து வாழ, மகிழ்ந்து உறவாடப் படைக்கப்பட்டவன். ஆனால் மனிதன் செய்த தவறால் எல்லாம் திசைமாறிப்போனது.

ஆனால் கடவுளோ மனிதனை மன்னித்து, மரணத்தை உடைத்து, மீண்டும் இறை உறவில் தன்னோடு மனிதனை இணைப்பதற்கு ஆயத்தமானார்.

ஆனால், சகல அதிகாரமுள்ள தேவன் மனிதனை மன்னிப்பதற்கும், மரணத்தை ரத்து செய்வதற்கும் ஓர் பெரும் தடையிருந்தது, அது அவரிடம் காணப்பட்ட நீதி, அந்த நீதியை அவர் மீறுவதேயில்லை, ஏனெனில் அவர் நீதியுள்ள கடவுள்.

அந்நீதியாவது என்ன? கீழ்காணும் இரு வசனங்களைக் கவனியுங்கள்.

“ஏனென்றால் சரீரத்தின் உயிர் இரத்தத்தில் உள்ளது. இரத்தத்தைப் பலி பீடத்தில்

ஊற்றும்படி நான் விதிகளைக் கொடுத்திருக்கிறேன். உங்களைச் சுத்திகரித்துக் கொள்ள நீங்கள் இதனைச் செய்ய வேண்டும். இரத்தமே ஆத்துமாவை பாவநிவிர்த்தி செய்கிறது.” (லேவியர் 17: 11)*ERV*

“அனைத்தையும் இரத்தத்தால் சுத்தப்படுத்த முடியும் என்று சட்டம் சொல்கிறது. இரத்தம் இல்லாமல் எவ்வித பாவங்களும் மன்னிக்கப்படமாட்டாது.” (எபிரேயர் 9:22) *ERV*

பரிசுத்தமானவர் இந்த நீதியின் வழியிலே பாவத்தை மன்னித்து, மரணத்தை உடைத்து மனிதனை மீண்டும் சொந்தமாக்க முடிவெடுக்கிறார்.

அதற்காகத் தன் குமாரனின் இரத்தத்தையே சிந்த முடிவெடுக்கிறார்!, அன்பிற்கு அடைக்குந்தாழ் உண்டோ!!!

மீட்பை இன்னும் எளிமையாய் புரிந்து கொள்வதற்காக.

ஆதாம் ஏன் தண்டனை பெற்றான்?, பாவம் செய்ததால் தண்டனை பெற்றான்.

இயேசு ஏன் தண்டனை பெற்றார்?, என்ன பாவம் செய்தார்?, தலைமுறை பாவம் கூட அவரிடம் இல்லை, ஏனெனில் அவர் யோசேப்பின் வித்து அல்ல பரிசுத்த ஆவியின் வித்து. அப்படியானால் இயேசுவுக்கு மரணம் சரியா?

பரிசுத்தமானவர், பாவமறியாதவர், தண்டிக்கப்படலாமா? மரணமடையலாமா? இக்கேள்விகளுக்கு விடை என்ன?, இல்லை, கூடாது என்பதே. பாவத்தின் சம்பளம்தான் மரணமே தவிர, பரிசுத்தத்தின் சம்பளம் மரணம் அல்ல.

இங்குதான். தேவதிட்டம் நடக்கிறது. எளிதில் புரிந்து கொள்வதற்காக எளிய முறையில் விளக்குகிறேன்.

இரண்டு ‘தராசை’ கற்பனை செய்து கொள்ளுங்கள்.

ஒன்று ஆதாமுடையது, அந்ததராசின் ஒருபக்கத்தில் ஆதாமின் பாவம், மறுபக்கத்தில் அதனால் வந்த மரணம். இப்போது தராசு நேர்கோட்டில் நிற்கிறது.

இன்னொரு தராசு இயேசுவினுடையது, அந்தத் தராசின் ஒருபக்கத்தில் ஒன்றும் இல்லை, ஆனால் மறுபக்கத்தில் மரணம் இருக்கிறது, இப்போது தராசு நேர்கோட்டில் இல்லை, மரணம் உள்ள பக்கம் மட்டும் தாழ்ந்து சமநிலையற்ற தராசாய் இருக்கிறது.

இங்கு கடவுள் இயேசுவின் தராசை சமநிலைப்படுத்த ஆதாமின் தராசில் உள்ள பாவத்தை எடுத்து இயேசுவின் தராசின் ஒரு பக்கத்தில் வைக்கிறார், இது எப்படியெனில் இயேசு தன்னை பலியாடாக்கி இரத்தம் சிந்தியதாலும், போக்காடாக பாவத்தை தான் ஏற்றுக்கொண்டதாலும், ஆதாமின் பாவம் இயேசுவினிடத்தில் மாற்றப்படுகிறது (பலியாடு மற்றும் போக்காடு விவரமாய் அறிய வாசியுங்கள்: லேவியராகமம் 16-ம் அதிகாரம்), இப்போது தராசு சமநிலையாகிறது, இப்போது ஆதாமின் பாவம் இயேசுவின் இரத்தஞ்சிந்துதாலும் மரணத்தினாலும் எடுக்கப்பட்டாயிற்று. ஆதாமின் பாவத்திற்கு பதிலாக இயேசுவின் இரத்தம் வைக்கப்பட்டாயிற்று, இதுவே மனுக்குல மீட்பின் திட்டம்.

(குறிப்பு: நீங்கள் எளிதில் புரிந்துகொள்ளவே என் கற்பனைகள் இணைக்கப்பட்டிருக்கிறது)

இதை வேதம் தெளிவு படுத்துகிறது.

"ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது போல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று." "அன்றியும் ஒரே மனுஷனுடைய(ஆதாம்) கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய(இயேசு) கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்." ரோமர் 5: 18,19

இயேசு கைவிடப்படுதல்

இந்த மீட்பின் திட்டத்தில் மிக முக்கியமானது என்பது இயேசுவின் இரத்தஞ்சிந்துதலும், மனுக்குலத்தின் பாவம் இயேசுவின் மீது சுமத்தப்படுதலும்.

இயேசு சிலுவையில் காலை 9 மணிக்கு அறையப்பட்டார், 12 மணிமுதல் தொடர்ந்து 3 மணிநேரம் காரிருள் சூழ்ந்து கொள்கிறது, சீன சரித்திரத்திலும் முதல் நூற்றாண்டில் ஏதோ ஒருநாள் 3 மணிநேரம் இருளாய் இருந்ததாக குறிப்பிடப்பட் ஒரு தகவலை நான் வாசித்திருக்கிறேன்.

இந்த நேரத்தில்தான் ஆதாம் முதல் உலகத்தின் பாவங்கள் அனைத்தும் இயேசுவின் மேல் சுமத்தப்படுகிறது. அவர் பாவமாக்கப்படுகிறார்.

கீழ்காணும் வசனங்களைவாசியுங்கள்:

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்ளூ அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்." (1பேதுரு 2:24)

"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்." (2 கொரிந்தியர் 5:21)

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்ளூ நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்."

"நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம் கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்." (ஏசாயா 53:5,6)

ஆம், இயேசு இப்போது சிலுவையில் பாவமாக்கப்பட்டு தொங்கிக் கொண்டிருக்கிறார்.

இப்போது இயேசு இரண்டுவிதமான மகா வேதனைகளைஅனுபவிக்கிறார்.

✯பாவமாக்கப்பட்ட இயேசுவிடமிருந்து, பாவத்தைப் பாராத சுத்தக் கண்களை உடைய பிதாவின் உடனிருத்தலை இயேசு இழந்தார். பிதாவானவர் பாவமாக்கப்பட்ட இயேசுவிற்கு



தனது முகத்தை மறைத்தார்
ஏனெனில் பாவத்திற்கும் பரிசுத்தத்திற்கும் சம்பந்தமில்லையே!

ஆதாம் பாவம் செய்த போது அவன் தேவ உறவை இழந்தான். தாவீது பாவம் செய்த போதும் தேவ பிரசன்னத்தை இழந்தான் (சங்: 51)

தேவநீதி தன் குமாரனுக்கும் விதிவிலக்கல்ல, பாவமாக்கப்பட்ட இயேசுவிடமிருந்து தேவபிரசன்னம் விலகியது. அதை இயேசுவால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை அந்த வேதனையே "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்பது.

இதனால் தான் செத்சமனேவில் ஆண்டவரே பாவம் நிறைந்த இந்த பாத்திரத்தை மாற்றமுடியுமோ என மன்றாடினார். ஏதேனில் நமது ஆதி பெற்றொருக்கு பாவத்தால் ஏற்பட்ட இழப்பு என்ன? கடவுளின் உடனிருத்தல் அல்லவா?

☆ இரண்டாவதாக, பரிசுத்தராகிய இயேசுகிறிஸ்து பாவத்தை சுமப்பது என்பது. அவர் பார்வையில் ஒரு மனிதன் ஒரு சாக்கடையில் மூழ்கி எழும்புவதை விட கொடிதானதாய் அவருக்கு இருந்திருக்கும். ஏனெனில் அவர் பரிசுத்தர், பாவமறியாதவர், பாவத்தை வெறுப்பவர். பாவம் தன்னை சூழ்ந்து கொண்டபோது பரிசுத்தர் பாவத்தின் அருவருப்பால் துடித்திருப்பார், சரீர வலியை கூட பொறுத்துக் கொண்டார், ஆனால் பாவத்தின் அருவருப்பை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அந்த வேதனையின் விளைவும் தான் "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்பது.

நிறைவுரை

பலர் நினைப்பது போல, இந்த வார்த்தை ஒரு நம்பிக்கை இழப்பின் வார்த்தை அல்ல, மாறாக நமது நம்பிக்கையே இந்த வார்த்தையில்தான் இருக்கிறது. நாம் கைவிடப்படாதபடியல்லவா அவர் கைவிடப்பட்டார்? அவர் அன்றைக்குக் கைவிடப்பட்டபடியினால் அல்லவா இன்றைக்கு நான் மீட்கப்பட்டிருக்கிறேன். இயேசுவே உமக்கு நன்றி. பிதாவே உமக்கு நன்றி. அன்புக்குரியவர்களே, நம் பாவம், இயேசுவையும், பிதாவையும் பிரித்தது அருவருப்பாகிய பாவத்தை சுமக்க வைத்தது, இந்த வேதனையை நாம்தான் அவருக்கு கொடுத்தோம். நாம் கைவிடப்படாதிருக்க அவர் கைவிடப்பட்டார். இதன் அர்த்தம் உணர்ந்தவர்களாய், அவர் அன்பை உணர்ந்தவர்களாய் நாம் மனம் திரும்பி அவர் விரும்பியபடி வாழ தீர்மானிப்போம்.

சிலுவை வசனம் 5

அதன் பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக "தாகமாயிருக்கிறேன்" என்றார் (யோவா.19:28).

J. ஜாண் டேனியேல்
கொற்றிகோடு

சிலுவையிலிருந்து இயேசு சொன்ன ஐந்தாவது வார்த்தை இதுவாகும். இயேசு இப்படிச் சொன்னவுடனே, அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து ஈசோப்புத் தண்டில் மாட்டி அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள் (யோவா.19:29).

'என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள். என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்' (சங்.69:21) என்னும் வேத வாக்கியத்தின் நிறைவேறுதலாக இந்த வார்த்தையைக் காண்கிறார் யோவான் நற்செய்தியாளர்.

இயேசுவின் தாகம் உடல் சார்ந்ததா? ஆன்மா சார்ந்ததா? அதாவது அது உண்மையாகவே தண்ணீர்த் தாகமா? இல்லை ஆத்துமத் தாகமா? என்னும் கேள்விகளுக்கு உண்மையான பதில் அது உடல் சார்ந்த தண்ணீர்த் தாகம்தான் என்பதே.

இயேசுவின் தாகம் அவரது உடல் சார்ந்த தண்ணீர்த் தாகம்தான் எனக் கொண்டால், 'தாகமாயிருக்கிறேன்' என்ற வார்த்தையின் ஆன்மீகத்தன்மை நீர்த்துப் போய், வெறும் தண்ணீர்த் தாகத்திலே எப்படி சாரமுள்ள

செய்தி வரும்? என நினைத்தே அனேகர் இந்த வார்த்தையை ஆன்மீகத்தாகம் என வர்ணிக்கின்றனர் என நான் நினைக்கிறேன்.

சரி, இந்த வார்த்தை சரீரத் தாகத்தின் வெளிப்பாடு என்று ஒத்துக்கொண்டால் அதிலே என்ன செய்தி இருக்கிறது? எனக் கேட்டால், அதில்தான் அழுத்தமான செய்தி இருக்கிறதெனவும் நான் உணர்கிறேன்.

இயேசு ஒரு முழுமையான மனிதராக, தமது தெய்வீக ஆற்றலைப் பயன்படுத்தாமல் சிலுவைப் பாடுகளைச் சகித்தார்:

இயேசு என்ற பெயரோடு 2000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மண்ணிலே மனித உடலோடு நடந்து திரிந்தாரே அவர் யார்? அவர் நூற்றுக்கு நூறு தெய்வமானவர். அதுபோலவே அவர் நூற்றுக்கு நூறு மனிதனானவர். இந்த உண்மையை வெளிப்படுத்துகின்ற ஓர் அரிய வார்த்தையாக 'தாகமாயிருக்கிறேன்' என்ற ஐந்தாம் திருமொழியை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

தாகம் மிகவும் கொடுமையானது. சிலுவைப் பாடுகளுக்கு முந்தைய நாளில் விசாரணை என்ற பெயரில் இயேசு அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டார். சாட்டையால் அடிக்கப்பட்டு உடல் கிழிக்கப்பட்டார். முள்முடி சூட்டப்பட்டார். பின்னர் சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டார். இவற்றால் அதிகமான இரத்தம் அவரது உடலிலிருந்து வெளியேறியது. அதனால் இயேசுவுக்குத் தாகம் உண்டானது. விபத்துக்களில் சிக்கி இரத்தம் இழந்தவர்கள் தண்ணீருக்காகக் கெஞ்சுவதை நாம் பார்த்திருக்கிறோமே. அப்படியேதான் இயேசுவுக்கும் தாகம் ஏற்பட்டது.

இயேசு ஒரு முழுமையான மனிதராகச் சிலுவைப் பாடுகளைச் சகித்தார். சிலுவையில் அவர் இருந்தபோதும் அவரிடத்தில் தெய்வீக ஆற்றல் முழுமையாக இருந்தது. அந்த ஆற்றலைப் பயன்படுத்தி அவர் தமது சரீர வேதனையை இல்லாமலாக்கி இருக்க முடியும். வலிதெரியாமல் ஆக்கி இருக்கவும் முடியும். மேலும் தண்ணீரை இரசமாக்க முடிந்த ஆண்டவருக்குக் காற்றையே தண்ணீராக்கிப் பருகிவிட முடியாதா என்ன? ஆனால் தமது தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தி உடல் வலியை இல்லாமலாக்கவோ, காற்றைத் தண்ணீராக்கிப் பருகவோ இயேசு முயலவில்லை. இங்குதான் இயேசுவின் பேராற்றல் வெளிப்படுகிறது. கையில் பூரண சுகம் தரும் மருந்தை வைத்துக்கொண்டே, கொடிய வயிற்று வலியைத் தாங்கிக் கொள்வதைப் போன்ற ஒரு நிலை இது. வேறு வழியில்லாமல் இயேசு வலியைத் தாங்கிக் கொள்ளவில்லை. வழி இருந்தும் அதைப் பயன்படுத்தாமல் வலியைத் தாங்கிக் கொண்டார்.

முந்தின நாள் ஒலிவமலையில் பிரதான ஆசாரியனின் வேலைக்காரனை இயேசுவோடிருந்தவர்களில் ஒருவர் பட்டயத்தால் வெட்டியபோது, பட்டயத்தை உறையிலே போடும்படி அதட்டிய இயேசு, 'நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால் அவர்

பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?' (மத்.26:53) என்று கேட்டாரே. என்ன அற்புதமான செயல் என்று பாருங்கள்.

அனைத்து ஆற்றலையும் அதிகாரத்தையும் தம்மிடத்தில் நிறைவாக வைத்துக் கொண்டே, ஒன்றுமில்லாதவர்போல் சிலுவையில் இயேசு, எனக்காகவும் உங்களுக்காகவும் சிலுவைப் பாடுகளைச் சகித்தார் என்றால் அந்த அன்பின் பெருக்கத்தை யாரால் அளவிட இயலும்? 'நான் ஒரு மனிதனாகத்தான் சிலுவையைச் சகித்தேன்' என்று நமக்குச் சொல்வதற்காகத்ததான் இயேசு 'தாகமாயிருகிறேன்' என்றாரோ?

தமது பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் இயேசு தமது தெய்வீக வல்லமையைத் தமது தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்திக் கொண்டதில்லை. நம்மைப் போன்ற ஒரு மனிதராகவே தம்மை வைத்துக்கொண்டார். சில சம்பவங்களை மட்டும் நாம் தியானிக்கலாம்.

தமது முப்பதாவது வயது வரை:

இயேசு கிறிஸ்துவின் வாழ்வின், ஊழியத்துக்கு முந்தைய முதல் முப்பது ஆண்டுகளில் நடைபெற்ற சம்பவங்களை நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, இயேசு தமது தெய்வீக ஆற்றலைத் தமக்கென்று பயன்படுத்தவில்லை என்பதைக் காணலாம்.

யோவானிடம் திருமுழுக்குப் பெற்று இயேசு நீரிலிருந்து கரையேறின உடன், தேவ ஆவி புறாவைப் போல் இறங்கி அவர்மேல் வந்தது. வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, "இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்" (மத்.3:17) என்று உரைத்தது.

பிதாவாகிய தேவன் மிகுந்த மன நிறைவோடும், மிகுந்த அன்போடும், ஒரு தாய் தனது பிள்ளையை நேசமாய் அணைத்து உச்சி முகர்வதுபோல் போல், தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி இப்படி அறிவிப்பதற்குக் காரணம் என்ன? அப்படி, கடந்த முப்பது ஆண்டுகளில் இயேசு சாதித்தது என்ன?

பிறந்த நாள் முதல் முப்பது ஆண்டுகள் வரையும் இயேசு எந்த அற்புதமும் செய்யவில்லை. எந்தப் பிரசங்கமும் செய்வில்லை. எந்த நோயாளியையும் குணமாக்கவில்லை. எந்தக்

குருடரின் கண்களைத் திறக்கவுமில்லை. தாம் மேசியா என்பதற்கான எந்த அறிகுறிகளையும் காட்டிக் கொள்ளவில்லை. அவ்வளவு ஏன்? மேசியாவின் வருகையை முன்னறிவிக்க வந்தரும், பெண்களிடத்தில் பிறந்தவர்களில் பெரியவரும், தீர்க்கதரிசிகளில் சிறந்தவரும், இயேசுவின் உறவினருமான யோவானுக்கே தெரியாது இவர்தாம் மேசியா என்பது (யோவா.1:33).

அப்படியானால் பிதாவாகிய தேவனை பிரியப்படுத்தின இயேசுவின் செயல் எது? தாம் மேசியா என்பதை அறிந்துகொண்டே, (தாம் மேசியா என்பதை இயேசு தமது 12 வயதுக்கு முன்னரே அறிந்திருந்தார்) மேசியாவுக்குரிய வல்லமைகளில் எதையும் தனக்கென்று பயன்படுத்தாமல் இருந்தாரே இயேசு, அதுதான் பிதாவைப் பிரியப்படுத்தினது.

தந்தையை இழந்த தமது பெரிய ஏழைக் குடும்பத்தின் தேவைக்காக இயேசு தச்சுத் தொழில் செய்து உழைத்தார். ஐந்து அப்பங்களினாலும் இரண்டு மீன்களாலும் 5000 பேருக்கு உணவு கொடுத்த ஆண்டவருக்கு தமது வீட்டில் ஒரு 10 பேருக்கு, தாம் உழைக்காமலே உணவு தந்திருக்க முடியாதா? மரணப் படுக்கையில் மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த நீதிமானான தமது தந்தைக்கு உயிர்கொடுத்துக் காப்பாற்றியிருக்க முடியாதா? இயேசு குழந்தையாக இருந்தபோது குழந்தையைக் காப்பாற்ற ஊர்ஊராக ஓடிப் பதறியவரல்லவா அந்தத் தந்தை? இப்படி ஏராளம்

சொல்லிக்கொண்டே போகலாம்.

இவ்வாறாகத் தமது 30 வயது வரையும் தம்மிடமிருந்த எந்த ஆற்றலையும் தமக்கென்றோ தமது குடும்பத்திற்கென்றோ உபயோகிக்காமல் ஒரு சாதாரண மனிதனாக, தச்சனின் மகனாக, உழைத்து, வேர்வை சிந்தி, கூலி வாங்கி, குடும்பத்தைக் காப்பாற்றி, தமது பிறப்பைக் குறித்த அயலகத்தாரின் கேலிகளைச் சகித்து, தமது தாயைக் குறித்துக் கூறப்பட்ட அவதூறுகளையும் தாங்கி.... ஓ!.. பரமண்டலங்களின் பிதாவின் ஒரே மைந்தனான இயேசு, சகல அதிகாரங்களுமுடையவர் இப்படி ஒரு குடிசைக் குடும்பத்தில்

தம்மைக் குறுக்கிக் கொண்டு ஒரு சாதாரண மனிதனாக வாழ்ந்து முடித்தாரே அதை நினைத்துத்தான் பிதா உள்ளம் மகிழ்ந்தார்.

தம்மைக் குறித்த பிறரின் மதிப்பீட்டைக் குறித்து இயேசு கவலை கொள்ளவில்லை

மேலும் பாவிகளின் வரிசையில் ஸ்நாபக யோவானின் முன் போய் நின்று, பாவமே செய்யாத இயேசு ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார். நூற்றுக்கு நூறு பிதாவுக்குச் சமமான அவர் மனம்திரும்புதலுக்கென்று யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை எடுத்துக் கொள்ளுவதென்பது அவரது மதிப்புக்குக் களங்கத்தை ஏற்படுத்துமே என்று அவர் நினைக்கவில்லை.

சிலுவையில் தமது ஐந்தாவது மொழியைச் சொல்லும் போதும், 'ஜீவ தண்ணீரைக் கொடுப்பேன்' (யோவா.4:10) என்று சொன்னவர் தனது தாகத்தையே தீர்க்க இயலாதவராக இருக்கிறாரே என்று மற்றவர்கள் நினைப்பார்களே என்றும் இயேசு கவலைப்படவில்லை. எப்போதுமே இயேசு, பிறருடைய மதிப்பை எதிர்பார்த்து எதையும் செய்யவில்லை.

அன்பானவர்களே!

'தாகமாயிருக்கிறேன்' என்ற வார்த்தை நமக்குத் தரும் செய்தி என்ன?

முதலாவது, தேவாதி தேவன் மனிதனாகச் சிலுவை ஏறி, நம்மை மீட்பதற்காக எத்தனையாய்ப் பாடுபட்டார் என்று உள்ளமுருக உணர வேண்டும்.

இரண்டாவதாக, பிறர் நம்மைக் குறைத்து மதிப்பிட்டுவிடுவார்களோ என்ற எண்ணத்தால் மாய்மாலமாய் பேசவோ நடக்கவோ கூடாது. நமது சிறப்புக்களை அறியாமல் பிறர் நம்மை உதாசீனம் செய்யும் போதும், 'நான் யார் தெரியுமா?' என்று நமது உள்ளம் கொதிக்கக் கூடாது.

நம்மைப் பிறரிடம் நிரூபிக்க முயலக்கூடாது, நாம் யார் என்பது நமக்கும் கடவுளுக்கும் தெரிந்தால் போதும். அதுதான் சுகமான வாழ்க்கைப் பயணம்.

நாம் யார் என்று நிரூபிப்பதில் அல்ல, நாம் யார் என்று நமக்குத் தெரிந்திருந்தும் அதைப் பிறருக்குத் தெரிவிக்காமல் இருப்பதில்தான் நமது ஆற்றல் வெளிப்படுகிறது.

ஆமென், ஆண்டவரே உம்மைப்போல் வாழ அருள் தாரும்.

சிலுவை வசனம் 6

முன்னுரை

முடிந்தது என்று சிலுவையில் ஆண்டவர் மொழிந்தது தோல்வியின் குரலா அல்லது வெற்றியின் குரலா?

பல வருடங்களுக்கு முன்னர் நானும் நண்பரொருவரும் இருசக்கர வாகனத்தில் தியான முகாம் ஒன்றில் செய்தியளித்துவிட்டு கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோவில் நோக்கி வந்து கொண்டிருந்தோம். கோட்டாறு அருகே வந்து கொண்டிருக்கும் போது எங்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த இன்னொரு இருசக்கர வாகனம் வேகமாக எங்களை முந்திச் சென்றது. பள்ளிக்கூடம் விட்டு வந்துகொண்டிருந்த ஒரு சிறுமி சடுதியாக சாலையின் குறுக்கே ஓடினாள். அசுர வேகத்தில் எங்களைத் தாண்டிய இருசக்கர வாகனம் அச்சிறுமி மீது மோதியது. சிறுமி நிலைகுலைந்து சாலையில் விழுந்தாள். எனக்குப் பின்னால் அமர்ந்திருந்த நண்பர் தன்னையுமறியாது பெருங்குரலில் (Finished) “முடிந்தது” என சப்தமிட்டார். இது உடைந்துபோன, நம்பிக்கையற்ற தோல்வியின் குரல்.

இயேசு காடியை வாங்கின பின்பு முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார்.
(யோவான் 19:30)

Rev. Justin Devadason
Rtd. District Chairman
CSI KK Diocese

12-ம் வகுப்பில் படிக்கும் ஒரு மாணவி மிகுந்த முயற்சியோடு வருடம் முழுவதும் கற்றவள் ஒவ்வொரு தேர்வுகளாக முடித்து மிகுந்த மன நிறைவோடு கடைசித் தேர்வினையும் எழுதி விடைத்தாளை சமர்ப்பித்து விட்டு வெளியே வரும் போது சொன்ன வார்த்தை “அப்பாடா! முடிந்தது” இது தோல்வியின் குரலல்ல மாறாக மகிழ்ச்சியின் குரல், நம்பிக்கையின் குரல், வெற்றியின் குரல். இயேசு சிலுவையிலும் ஆறாவது மொழியாக இதே வார்த்தையினைத்தான் கூறியுள்ளார். இது தோல்வியின் குரலா அல்லது வெற்றியின் குரலா?

கடமைகளை முடித்த கம்பீரக் குரல்

மாற்கு நற்செய்தியாளர் “இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார்” என்று இயேசுவின் குரலை வருணிக்கிறார் (மாற்கு 16:37). கடவுள் தமக்குத் தந்திருந்த உலகத்தின் மீட்பின் பணிவிடைகள் யாவையும் முழுமையாய் நிறைவேற்றி முடித்த திருப்தியுடன் இவ்வார்த்தைகளைக் கூறுகிறார்.

பெத்லகேம் முதல் கல்வாரி வரையிலுமுள்ள இயேசுவின் வாழ்வுப் பயணத்தில் அவரது ஒரே குறிக்கோள் பிதாவின் சித்தத்தினை நிறைவேற்றுவதே. அதுவே தமது உணவு என இயேசு தமது சீடர்களிடம் தெரிவித்திருந்தார் (யோவான் 4:34). பிதாவின் தீர்மானத்தின் உச்சநிலையே சிலுவை. அது கடினம் மிகுந்த கசப்பான பானமாக இருப்பினும் கெத்சமனே தோட்டத்தில் “என் பிதாவே, இந்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணினாலொழிய இது என்னை விட்டு நீங்கக் கூடாதாகில் உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது” என்று வேண்டுதல் செய்தவர் சிலுவையின் வழியாய் பாடுகளாகிய பாத்திரத்தின் அடிவண்டலையும் பருகி கடவுளின் தீர்மானமாகிய தமது பணிவிடைகளை முழுமையாய் நிறைவு செய்தார்.

சிலுவையில் இயேசு தொங்கிக்கொண்டிருக்கும் நிலையில் அவரைப் பார்த்தவர்களின் பார்வைகள் பலவிதமாய் அமைந்திருந்தன. பரிசேயர்களின் பார்வையில் அவர் ஒரு சமய விரோதி, தேசதுரோகி.. ரோமாபுரி வீரர்களின் பார்வையில் இயேசு இரு குற்றவாளிகளின் நடுவில் அறையப்பட்ட பெரும் தீவிரவாதி. அவரைச் சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த பிலாத்துவின் பார்வையில் அவர் அநீதியாய் குற்றம் சாட்டப்பட்டு சிலுவை மரணத்திற்குத்தள்ளப்பட்ட குற்றமில்லாத மனிதர். ஆனால் இவர்களில் எவரும் இயேசுவின் பார்வையினைக் அறிந்திருக்கவில்லை. இயேசு, தமது தந்தையாகிய கடவுள் தன்னை உலகத்தில் மானிடனாகத் தோன்றச் செய்த இறை தீர்மானத்தின் நிறைவேறுதலை சிலுவைப்பாடுகளின் வழியாகக் கண்டார்.தமது சரீரத்தில் ஊடுருவியிருந்த ஆணிகள், சரீரத்திலிருந்து வற்றாத ஊற்றாய்ப் பாய்ந்து கொண்டிருந்த உதிரம், ஒடுங்கிக் கொண்டிருந்த அவரது ஆவி இவைகளின் வழியாக இயேசுகிறிஸ்து தமது பணிகளின் வெற்றிப் பயணம் ‘முடிந்தது’ எனும் வார்த்தையால் பறைசாற்றினார். நமக்கு நியமிக்கப்பட்டுள்ள

கடமைகளை முழுமையாக நாம் நிறைவேற்றி முடித்துள்ளோமா?

அலகையினை வென்ற வெற்றியின் குரல்

ஏதேனில் மனுக்குலத்தை சிதைத்து அழித்துக் கொண்டிருந்த வலுசர்ப்பத்தின் தலை நசுக்கப்பட கடவுள் தந்த வாக்குத்தத்தமே 'அவர் (ஸ்திரீயின் வித்து) உன் தலையினை நசுக்குவார் என்பதாகும் (ஆதி. 3:15). கிறிஸ்துவின் வாழ்வும் பணியும் இது சார்ந்ததாகவே அமைந்திருந்தது. பிசாசுகளைத் துரத்தி இறையரசை உலகில் மீண்டும் நிலை நாட்டுவதே தமது தலையாயப் பணி என்பதை உறுதிப்படுத்தினார் (மத். 12:28). திருத்தூதுவராகிய யோவான் இதனைத் தமது நிருபத்தில் "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும் படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" (1 யோவான் 3:8) என மிகச்சரியாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இயேசுவின் வருகையால் பிசாசின் கூட்டங்கள் அஞ்சி நடுங்கின (மத். 8:29).

இயேசு கிறிஸ்துவின் சிலுவை என்பது அலகையின் ஆற்றலைப் பறிக்க கடவுள் ஆயத்தப்படுத்திய பொறியே என்பதை திருமறையின் வழியாக நாம் புரிந்து கொள்ளலாம். இயேசுநாதர் குருத்தோலைப் பவனியாக எருசலேமில் நுழைந்ததுமே பிசாசானவன் அவனது அரியணையிலிருந்து தள்ளப்பட்டான் (யோவான் 12:31). சிலுவையில் இயேசுவின் சரீரத்தின் மீது அடிக்கப்பட்ட ஆணிகள் உண்மையிலேயே பிசாசானவனின் அதிகாரம் ஆற்றல் இவைகளப் பறிக்க அவனது தலையில் இறக்கப்பட்ட சம்மட்டிகளே. பவுல் அடிகளார் இதனை "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்" (கொலோ. 2:14,15) எனத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றார். தேனீயிடம் கொட்டுகின்ற ஒரு முள் உண்டு. அதனை வைத்துக் கொண்டு தேனீ மனிதரைப் மிகப் பயமுறுத்தும். ஆனால் அது ஒரு முறை கொட்டி விட்டால் அதன் வயிறு கிழிந்து அது செத்துவிடும். அவ்வாறே பிசாசானவனும் தனது மரணம் என்னும் கொடிய ஆயுதத்தால் மனுக்குலத்தையே தனது பிடிக்குள் வைத்திருந்தான். ஆதனை அவன் இயேசுநாதரிடத்தில் பயன்படுத்தினான். இயேசு மரணத்தை தமது உயிர்த்தெழுதலால் வென்றார். பிசாசானவன் தனது அதிகாரத்தையும் ஆற்றலையும் இழந்தான். மரணம் இறைசமூகத்திற்கு செல்லும் நுழைவாயிலாயிற்று. அவன் வசமிருந்த கல்லறை கைப்பற்றப்பட்டு இறை பிரசன்னம் நிறைந்ததாய் மாற்றப்பட்டது. தேவதூதர்கள் கல்லறையினுள் இறங்கினர். ஆக பிசாசானவனின் ஆற்றலும் அதிகாரமும் பறிக்கப்பட்ட போர் வெற்றியின் முழக்கமே முடிந்தது எனும் வார்த்தை.



கடன்களை முடித்த கரிசனையின் குரல்

ஏசாயா தீர்க்கர் தமது தரிசன உரையில் இவ்வாறு கூறுகிறார். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர்காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்: (ஏசாயா 53:5). இயேசுநாதர் சிலுவையில் மொழிந்த முடிந்தது எனும் சொல்லுக்கு கிரேக்க மொழியில் 'Tetelestai' (றெற்றெலெஸ்டாய்) எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை வர்த்தக இடங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்ற வார்த்தை. ஒரு கடையில் சென்று பொருட்களை வாங்கிவிட்டு பொருட்களுக்கான கிரயத்தைச் செலுத்தும் போது கடைக்காரர் கட்டணப்பட்டியலில் 'Paid in Full' (கட்டணம் செலுத்தப்பட்டது) என்று முத்திரையிட்டு பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கிறார் அல்லவா? முடிந்தது என்ற சொல்லுக்கும் இதே வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது நாம் செலுத்த வேண்டிய கிரயம் இயேசுகிறிஸ்துவால் சிலுவையில் செலுத்தப்பட்டுள்ளது. நாம் செலுத்த வேண்டிய கட்டணம் எது? ஏசாயா தீர்க்கர் தமது தரிசன உரையில் இவ்வாறு கூறுகிறார். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்ளூ நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் விழுந்தது (ஏசாயா 53:5). நமது குற்றங்களையும் அக்கிரமங்களையும் அவர்தன் மீது ஏற்றுக் கொண்டு அதற்கென்று நம்மேல் சுமத்தப்பட்டிருந்த தண்டனையையும் அவர் தன் மீது ஏற்றுக்கொண்டார். இதுவே சிலுவையின் சரித்திரம்.

முடிந்தது என்ற அவரது முழக்கத்தால் நமது விடுதலை உறுதியாக்கப்பட்டுள்ளது. இதற்கு நமது பதிலுரை என்ன? மிகுந்த நன்றியுணர்வோடு விந்தைக் கிறிஸ்தேசுராஜா! உந்தன் சிலுவை என் மேன்மை" என பக்தருடன் இணைந்து நாமும் பாடலாமே.

"தந்தையே உம்முடைய கைகளில் என் உயிரை ஒப்படைக்கிறேன்"

(லூக்கா 23:44-47)

Jayakumar
BILT Minstry, Chennai

உறவு சார்ந்த ஒப்படைப்பு

"தந்தையே உம்முடைய கைகளில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" எனும் இவ்வார்த்தை சிலையர்மாக்கர் எனும் இறையறிஞர் கூறுவது போல் இயேசு தாம் தந்தையிடம் கொண்டிருந்த அறுபடாத இறையுறவை வெளிப்படுத்துகின்றது (Jesus hold an uninterrupted God Consciousness).

இயேசு தந்தையே என அழைக்கும் போது பாசமும் உறவும் வெளிப்படுகின்றது (யோ10:30). இந்த உறவு சிலுவை மொழிகளில் தொடக்கத்திலும் நடுவிலும் இறுதியிலும் ஒலிக்கின்றது. இயேசு தந்தையோடு கொண்டிருந்த அறுபடாத இந்த ஒப்படைப்பு தான் இருளின் சக்திகள் மீதும், இயற்கை சக்திகள் மீதும், பொய்மையான ஆன்மீக சக்திகள் மீதும் மாற்றத்தைக் கொண்டுவந்தது.

லூக்காவின் தகவல்படி ஏறக்குறைய நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. கதிரவன் ஒளி கொடுக்கவில்லை (23:44-45). இருளின் அதிகாரம் சமயத் தலைவர்களையும் உரோமை ஆட்சியாளர்களையும் பிடித்திருந்ததை இயற்கை எடுத்துக் காட்டியது. மனிதச் செயல்கள் இயற்கையைப் பாதிக்கின்றன. தொடர்ந்து திருக்கோவிலின் திரை நடுவில் கிழிந்தது. லூக்கா இதனை இயேசுவின் இறப்புக்கு முன் வைக்கிறார். இயேசு உயிர்விட்டவுடன் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது என்று

மத்தேயுவும் (27:51) மாற்குவும் (15:38) எழுதுகிறார்கள். எருசலேம் கோவிலில் இத்திரைச்சீலை தலைமை குரு மட்டும் செல்லும் பலிபீடத்திற்கும் சபையாருக்கும் நடுவாகத் தொங்கியது. தலைமைக் குருக்கள் எத்துணை மதவெறியும் கொலை வெறியும் உடையவர்கள் என்பதை இயேசுவின் இறுதிவாரம் எடுத்துக்காட்டியது. இனி ஒரு புதுயுகம் தொடங்குகிறது. அருள் பொழிவு பெற்ற குருக்களுக்கும் மக்களுக்கும் இடையே பிளவு இல்லை. ஆயினும் இந்த உண்மையை கண்டுகொள்ளாத ஆயர்களும் பேராயர்களும் பலிபீடம் (altar) என்ற ஒன்றை ஏற்படுத்தி, கிளர்ஜி-லேமென் (Clergy-layman) என்ற பாகுபாட்டை உருவாக்குகின்றார்கள். சாதாரண சபை மக்கள் அதனுள் போகக்கூடாது என்ற மரபை வளர்த்து வருகிறார்கள். சீர்திருத்தச் செம்மல் மார்டின் லுத்தர் வலியுறுத்திய அனைவரும் அரசார்ந்த குருகுலம் என்ற உண்மையை இருட்டடிப்புச் செய்கிறார்கள். இன்றைய சமயவாதிகள் கிழிந்த திரையை மீண்டும் தைக்கிறார்கள் இது தவிர, மத்தேயுவின் கூற்றுப்படி நிலம் நடுங்கியது. பாறைகள் பிளந்தன (27:51). இயற்கை பற்றி மேலே கண்ட உண்மைகள் இங்கு பொருந்தும். அத்துடன் இறைமகனை சித்திரவதை செய்து கொன்றதற்கு இயற்கை தம் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டதுபோல் தெரிகிறது. தமக்கே உரித்தான முறையில் மத்தேயு கல்லறைகள் திறந்து, இறந்த இறைமக்கள் உயிரோடு எழுப்பப்பட்டதாக எழுதுகிறார் (27:52). சாவின் நடுவில் வாழ்வு வெற்றிபெறுவதை எடுத்துக்காட்டும் இந்த நிகழ்ச்சி பின்னர் நடக்கப்போகும் உயிர்த்தெழுதலுக்கு முன்னோடியாய் அமைகின்றது. நமது வாழ்வில் எல்லா நிலைகளிலும் அறுபடாத இறையுறவினைக் காக்கின்றோமா?

உறுதிசார்ந்த ஒப்படைப்பு

பக்தியுள்ள ஒவ்வொரு யூதரும் சங்கீதம் 31:5ன் படி உமது கைகளில் என் உயிரை ஒப்படைக்கிறேன் எனவும் ஜெபிப்பார்கள். ஸ்தேவானும் தான் கல்லெறிந்து கொல்லப்படும் சமயம் என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஜெபித்தார் (அப் 7:59) “தந்தையே உமது கையில் எனது உயிரை/ஆவியை ஒப்படைக்கிறேன்” என்று கூறிய வார்த்தைகள் சாகும் தருவாயில் சாதாணமாக மனிதன் வாயில் வருகின்ற வார்த்தைகள் அல்ல. ஏனென்றால் இயேசுவே தான் வாழும் போது சொல்லியிருப்பதைப் போல “என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்ளவில்லை நானாகவே அதைக் கொடுக்கிறேன்” (யோவான் 10:18) சாவு அவர் மீது சர்வாதிகாரம் காட்டவில்லை. தாம் எதற்காக இந்த உலகம் வந்தாரோ அதை முடிக்கும் வரையிலும் தனது உறுதிநிலையிலிருந்து விலகிச் செல்லவில்லை. வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் தந்தையோடு இரண்டறகலந்து உறுதியாக தன்னுடைய இலட்சியத்தை முடிக்கின்றார் இயேசு. மீட்பின் திட்டத்தின் இறுதியாக, தன் உயிரை இறைவனுடைய கரங்களில்

ஒப்படைத்து விடுகின்றார். இது முடிவல்ல, புதுவாழ்வின் துவக்கம். நமது வாழ்வில் அழைப்பில், ஊழியத்தில், உறுதியான ஒப்படைப்பும் இலட்சியமும் தேவை

உண்மைசார்ந்த - ஒப்படைப்பு

உண்மையை இருட்டடிப்பு செய்யும் சமூகம் இது: இயேசு உண்மைக்காக/ சத்தியத்திற்காக வாழ்ந்த சத்தியர். உண்மையை நிலைநாட்ட இயேசு சிலுவை மரணம் ஏற்றார். இயேசுவை சிலுவைக்கு ஒப்படைத்தவர்கள் அன்றைய யூத சமயவாதிகளே. சுயநலமிக்க சில்லறை ஆன்மீகவாதிகள், அன்றைய ரோம அரசியல், ஆதிக்க சக்திகளோடு கரம் கோர்த்து உண்மைக்கு மாறாக சிலுவை மரணத்திற்கு ஒப்படைத்தனர். ஆனால் இயேசுவின் சிலுவை மரணத்தை கண்ட நூற்றுவர் தலைவர் ஒருவர், காவல் காத்த தம் உடன்பணியாளர்களோடு சேர்ந்து இவர் உண்மையாகவே இறைமகன் என்றார் (மத் 27:54, மாற்கு 15:39இல் அவர் மட்டும்). லூக்காவின் கருத்துப்படி இயேசு உரக்கக் கூறி உயிர்விட்டதைக் கண்ட நூற்றுவன் தலைவர் இவர் உண்மையாகவே நேர்மையாளர் என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார் (23:47).

சொந்த மக்கள் சிலுவைச் சாவைச் சாத்தினபோது ஒரு புறவினத்தவர் இப்படி அறிக்கை செய்தது ஆச்சரியமானது. இயேசுவின் அதிகாரமும் ஆற்றலும் கேள்வி கேட்கப்பட்ட நிலையில் உண்மையான அதிகாரம் (அடிமைப்பணி செய்தல்) என்ன என்பதை அவர் உளர்ப்பூர்வமாக உணர்ந்து கொண்டார். புதிய ஏற்பாட்டில் இப்படி வரும் ஒரு சில நூற்றுவர் தலைவர்களும் அவர்தம் நற்குணங்களும் சிந்திக்கப்பட வேண்டும் (மத் 8:5-13, திப 10:27, 27:1-3). பல கிறிஸ்தவர்களை விடவும் சில பிற சமயத்தவர் மிகவும் ஆன்மீக அறநெறியிலும் பிறருக்கு வலிய சென்று உதவி செய்வதிலும் சிறந்து விளங்குகிறார்கள். இறையாட்சிக்காகப் பிற இனத்தவர் உழைக்க முடியும் என்று இயேசு போதித்தார். கிறிஸ்தவர்கள் உண்மைக்காகத் தங்களை ஒப்படைத்து சாட்சி பகரவும், உண்மைக்காக பாடுபடவும் இயேசுவை போல் உண்மையை நிலைநாட்டவும் அழைக்கப்படுகின்றனர். நாம் நம்மை உண்மைக்காக ஒப்படைக்கும் போது புதிய ஆன்மீகம் மலரும் ●

நாங்கள் உங்களிடத்தில் எதிர்பார்ப்பது

நீங்கள் இந்த பத்திரிகையால் ஆசீர்வதிக்கப்பட்டால்,
தயவு செய்து உங்கள் கிறிஸ்தவ நண்பர்களோடு
இதை பகிர்ந்து கொள்ளுங்கள்

உங்களால் முடிந்தால் இந்த பத்திரிகையை
கறுப்பு வெள்ளையில் அச்சிட்டு
electronics device இல்லாதவர்களுக்கு
படிக்க கொடுத்து உதவுங்கள்

இறை மக்கள் சிலருடைய பண உதவியினாலே
இந்த பத்திரிகையை எங்களால் வெளியிட முடிகிறது,
எங்களுடைய தரிசனம் இதை புத்தகமாக அச்சிட்டு
மக்கள் கையில் கொடுக்க வேண்டுமென்பதே

எனவே நாங்கள் இந்த **E - Magazine** க்கும்
ஒரு விலையை ரூ – 100 நிர்ணயிக்கின்றோம்,
இந்த பணத்தை கொண்டு அடுத்தகட்ட பணியை நிறைவேற்ற
விழைகின்றோம், உற்சாகமிருந்தால் கொடுக்கலாம், கட்டாயமல்ல

நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் கீழ்கண்ட
Bank account அல்லது Google pay வழியாகவும் அனுப்பலாம்

Bank Account Details:
S. Merlin
Acc. No.: 353701000000873
IFSC IOBA0003537
VERKILAMPI BRANCH

Google Pay ID:
+91 9486954577
merlin.kannanoor@oksbi

Edited and Published by S. Merlin,
16/76 Vettukattuvilai, Kannanoor -629158, Kanyakumari District, Tamilnadu, India